


பி. ஸ்ரீ.

211. ராட்சஸக் கோமாளி

இராம லட்சுமணர்களும் சீதாதேவியும் நாட்டின் எல்லையை விட்டுக் காட்டிலே அடியெடுத்து வைத்தார்கள், நட்ட நடுநிசியிலே. அந்த மூங்கிற் காட்டிலே, அவர்கள் முன் அறிந்திராத அந்தக் காட்டுப் பாதையில் அடி மேல் அடியெடுத்து வைத்துக்கொண்டே அதி ஜாக்கிரதையாகவே அவர்கள் சென்றிருக்க வேண்டும். அந்த மையிருட்டு அவர்களை விரைவாக முந்தவிடாமல் தடுத்துக் கொண்டே இருந்தது. ஆகவே, அந்த இருட்டைப் பாவத்திற்கும் பாவகாரிகளான அரக்கர்களுக்கும் சிநேக பந்துவாக்கி, தருமஸ்வரூபிகளை அது முன்னேறவிடாமல் தடுக்க முயன்றதாகக் கவிஞன் வருணித்தான், அயோத்தியா காண்டத்திலேயே.

ஆனால் அவர்களா இடையூறுகளுக்கு அஞ்சிப் பின் வாங்குகிறவர்கள்? இடையூற்றுக்கு இடையூறான அந்தத் தரும ஸ்வரூபிகள், அக்காட்டு வழியிலுள்ள பாம்பு முதலான துஷ்டப் பிராணிகளெல்லாம் விலகியோடும்படி வில் இரண்டையும் டங்காரம் செய்துகொண்டே முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

கவிஞன் கனவு

தருமவீரர்களுக்குக் கடவுளே வழிகாட்டுகிறாராம். சந்திரோதயமானதும், காரிருளில் வழிகாட்ட வானமே கைவிளக்கு எடுத்தது போலத் தோன்றியது. அந்த நிலாச்சுடர் காட்டிய ஆசைமுகம், தருமத்தின் மலர்ந்த வதனத்தை ஞாபகப்படுத்தியது.

உலகத் திரைக்குப் பின்னே, சூட்சும வானுலகில் தொந்த யுத்தம் செய்து கொண்டிருக்கும் பாவமாகிய இருளும், தருமமாகிய ஒளியும் ஞாபகத்திற்கு வந்தன. இராவணன் ஆட்சியில், அரக்கர் ஏகாதிபத்தியத்தில், தருமம் தோற்று அதருமத்தால் அழுத்தப் பெற்றுக் கீழே பேச்சு

மூச்சில்லாமல் விழுந்து கிடந்ததாகவும், அப்போது தான் இராம லட்சுமணர்கள் காட்டு வழியில் அடியெடுத்து வைத்து, அந்த நள்ளிரவிலே வில்லை டங்காரம் செய்துகொண்டு வந்ததாகவும், கவிஞன் பகற்கனவு கண்டான். அந்த டங்கார இடிகள், இடிமேல் இடி இடிப்பது போல் முழங்க முழங்க, அதருமம் பிடி தளர்ந்து நடுங்கி உருளத் தருமம் மலர்ந்த வதனத்துடன் நோக்குவதாய்க் கவிஞன் கண்ட பொற். கனவு, அயோத்தியா காண்டத்திலேயே ஆரணிய காண்டத்திற்கு ஒரு தோற்றுவாயாக அமைந்து விடுகிறது.



இருள் பூசிய கலிகாலம்

இருளின் சக்திகளைத் தண்டகாரணியத்திலே தான் ராமலட்சுமணர்கள் நன்றாக அறியத் தொடங்குகிறார்கள். இவ்வனத்தில் அவர்கள் அடி வைத்தவுடன்,

கங்கு பூசிவரு கின்றகலி
காலம் எனவே,

[கங்கு – கங்குல் ; இருள்.]

விராதன் வந்து எதிர்ப்படுகிறான். ராட்சஸ மகா ராஜ்யமாகிய இருளுலகத்தின் அபார சக்திகளை முன்கூட்டியே கட்டியம் கூறி அறிவிப்பது போல வருகிறான்.

விராதனை நாம் உற்றுப் பார்க்க வேண்டும் — அச்சமில்லாமல் கவிதைக் கண்ணாடி வாயிலாக :

தங்கு திண்கரிய காளிமை
தழைந்து தவழப்
பொங்கு வெங்கொடுமை என்பது
புழுங்கி எழ,மா

மங்கு பாதகம், விடம், கனல்
வயங்கி நிமிரக்
கங்கு பூசிவரு கின்றகலி
காலம் எனவே,

[தங்கு — தங்கிய. திண் — திண்மை வாய்ந்த. கரிய காளிமை — (பயங்கரமான) பெருங் கறுப்பு. பொங்கு — பொங்குகிற. வெங் கொடுமை — கொடிய கொடுமை ; வெப்பமாய் வெதுப்புகிற கொடுமை. மா - பெரிய. மங்கு பாதகம் — மங்குகின்ற பாதகம். விடம் — விஷம். வயங்கி — விளங்கி.]

விராதன் வருகின்ற வைபவம் பாருங்கள்.

விராத சித்திரம்

ராமாயணம் கலியுகம் பிறப்பதற்கு முந்திய யுகத்திற்கும் முந்திய யுகமான திரேதா யுகத்தில் நடந்தது என்பர். அந்த யுகத்திலேயே இந்தக் கலியுகத்தைக் கொண்டுவந்து விடுகிறான் விராதன். கலிகாலமே உருவம் பெற்று நடமாடுகிறது என்று சொல்லும்படி வருகிறான்.

அமாவாசை யிருட்டில் பொல்லாத கொலைகாரன் ஒருவன் கன்னங் கரேலென்றிருக்கும் தன் உருவத்தின் மீது கரிய மையையும் பூசிக் கொண்டு வருவது போல், கலிகாலமானது அமாவாசை இருட்டைக் கருஞ்சாந்து போலக் குழைத்துப் பூசிக்கொண்டு வருகிறதாம்.

பயங்கரமான அந்த அட்டக் கறுப்பிலே, மங்கி எரியும் பெரும் பாவமும், விஷமும் கனலும் எப்படியோ கலந்து ஒளிர்வது போலத் தோன்றுகிறதாம். கொடுங் கொடுமை பொங்கிப் புழுங்குவதுபோலவும் தோன்றுகிறதாம்.

எப்படி வியாக்கியானம் செய்தாலும், வசனத்தால் சொல்ல முடியாத — ஏன், பாஷையினாலேயே சொல்ல முடியாத — ஓசைச் சித்திரம் இச் செய்யுள்.

இப்படிப்பட்ட வர்ணனைகளை 'உயர்வு நவிற்சி தானே' என்று சொல்வதில் பயனில்லை. இத்தகைய 'உயர்வு நவிற்சி நாளைக் காலையே மறைந்து போனால், பிற்பகலே உலகம் அலுத்துச் சலித்து மரணச் சோர்வை அடைந்து விடும்' என்றார் வெல்மன் எல். பிரான்ஸ் (Wellman L. France) என்ற ரவிகர்.



இந்த விராதன் மதயானைகளையும், அவற்றின் விரோதிகளான சிங்கங்களையும் யாளிகளையும் தன் பெரிய இருப்புச் சூலத்தில் ஒருசேரக் கோத்துக் கையால் பிடித்துக் கொண்டிருக்கிறானாம். இது விராதனுடைய சமதர்மம்!

தலையெல்லாம் சுருட்டை ரோமங்கள். ஆ! அந்தக் கண்கள் இரண்டு புண்கள் போலச் சிவந்து ஒளி செய்கின்றனவாம், அட்டக்கரியான மேனியிலே. 'அறிவில்லாதவர்களுக்குக் கண்கள் முகத்திலே இரண்டு புண்கள்!' என்றார் திருவள்ளுவர். விராதனுடைய அத்தகைய கண்களிலிருந்து கோரமாய்க் கனல் பொங்குகிறது. விண்ணும் மண்ணும் நடுங்குகின்றனவாம் இந்த அரக்கனைக் கண்டு.

வரும்போதே பெரும் பசியோடு வருகிறான். தன் சூலத்தில் அலட்சியமாகக் கோத்துப் பிடித்துக் கொண்டு வந்த யானை முதலிய 'உணவு வகை' களைப் பாக சாஸ்திரத்தின் உதவியில்லாமலே உட்கொள்ளுகிறானாம். இவ் உணவுகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கை வாய்க்கு ஊட்டிக் கொண்டே வருகிறது.

பசியோ பசி!


இவை யெல்லாம், போகப் போகத் தொலையாதிருக்கும் அந்தக் குகைக்குள் போய்க்கொண்டே யிருக்கின்றன. பசியோ மேலும் மேலும் பொங்கி, 'இன்னும் கொண்டுவா, கொண்டுவா!' என்று உத்தரவு போட்டவண்ணமாய் இருக்கிறது. எனினும் இவன் தன் உணவை அப்படியே விழுங்கி விடாமல், (நமது ஆரோக்கிய சாஸ்திரிகள் வற்புறுத்துவதுபோல்) மென்று மென்று தின்னுகிறானாம். ஆம், நெருப்பாலும் 'விடமின்' (Vitamin) கெடாமலே! என்ன பசி, என்ன ருசி! என்ன சாப்பாடு, என்ன சாமர்த்தியம்! கைக்கும் வாய்க்கும்தான் எவ்வளவு பலமான போட்டி!

> பின்று கின்றபிலனிற் பெரிய
> வாயின் ஒருபால்
> மென்று தின்று விளியாது
> விரியும் பசியொடே,

[பின்றுகின்ற—(போகப் போகத் தொலையாது) பின்னிட்டுக் கொண்டே யிருக்கும். பிலனின்—பிலம் அல்லது குகை போன்ற. ஒருபால்—ஒரு பக்கத்தில். விளியாது — மாளாமல்; அடங்காமல்.]

வரும் விராதனுக்கு அந்த உணவு அனைத்தும் கடைவாய்க்குத்தான் போதுமா? இருந்து சாப்பிட நேரமில்லை; நின்று சாப்பிடவும் அவகாசமில்லை. நடையிலேயே போஜனமும் நடக்கிறது!

இப் பெரும் பசியன், இப் பெருந் தீனிக்காரன், இந்த ராட்சஸக் கோமாளி, தன் விருந்து-விசித்திரங்களுக்கிடையே, புது விருந்தாக வரும் அரசிளங்குமாரரைப் பார்க்கிறான்; அரசிளங் குமரியையும் பார்த்து விடுகிறான். கோரப் பற்களோடு கூடிய வாயைத் திறந்து, 'நில்லும், நில்லும்' என்று அதட்டிக் கொண்டே வந்தவன், சீதையைக் கண்டதும் மற்றவர்களைப் புறக்கணித்துச் சீதையை ஒரு கையால் எடுத்துக் கொண்டு ஆகாச மார்க்கமாய்க் கிளம்பி விடுகிறான்.



பி. ஸ்ரீ.

212. பூச்சாண்டியின் தத்துவ ஞானம்

நடையில் தான் என்ன மிடுக்கு, என்ன வேகம்! முடுகிச் செல்லும் வேகத்திலே மலைகள் பிளந்து போவது போலவும், மரங்கள் இடம்விட்டுப் பெயர்ந்து போவது போலவும் தோன்றுகிறதாம். தன்னால் கொல்லப் பட்டவர்களது இரத்தத்தைச் சந்தனம்போல் — செஞ்சந்தனக் குழம்பாய் —நெஞ்சிலே பூசிக் கொண்டிருக்கும் கோரம் தெரிகிறது, இவன் நெருங்கி வர வர. தற்கால யந்திர ராட்சஸனுடைய கோரமும் வேகமும், பலமும் பசியும் விராதனிடத்திலும் காணப்படுகின்றனவா?

என்ன கோலம், என்ன கோஷம்!

ஆனால், இந்த இதிகாச ராட்சஸனுக்கு நாகரிகம் இல்லை, சூழ்ச்சித் திறமும் இல்லை; மிருக பலமும் யந்திர பலமும் உண்டு. பல்லாயிரக் கணக்கான மதயானைகளின் பலத்தையும் மதத்தையும் உடையவன், தன் மிருக பலத்திற்கு அறிகுறியாக யானைத் தோல்களை இடுப்பில் உடையாகச் சுற்றிக் கொண்டு, அதன்மேல் அரைக் கச்சாக மலைப்பாம்பைக் கட்டியிருக்கிறான்; புலித்தோல்களை உத்தரியமாக முறுக்கி விட்டிருக்கிறான். இது இவன் கோலம்.

இனி, விராதன் வருகிற கோஷத்தைத் தான் எப்படி ஒலிப்பதிவு செய்திருக்கிறது இந்தக் கவிதை :

செங்கண் அங்கஅர வின்பொரு-
 வில்செம் மணிவிராய்,
வெங்கண் அங்க வயெங்களும்
 விலங்க விரவிச்,
சங்க ணங்கிய சலஞ்சலம்
 அலம்பு தவளக்
கங்க ணங்களும் இலங்கிய
 கரம்பி றழவே,—

[செங்கண்—சிவந்த கண்கள். அங்க அரவின் — (நீண்ட) உடலையுடைய பாம்புகளின். பெருவு இல் — ஒப்பில்லாத. செம்மணி — சிவந்த மாணிக்கங்களை. விராய் — பதித்துச் செய்து. வெங்கண் — (அந்த வேலைப்பாட்டிலேயே) கொடுமை விளங்கும்படியான. அங்க வலயங்களும் — அங்கத்திலே அணிதற்கு உரிய வளைகளும்; (இங்கே) அங்கம் — தோள். விலங்க — விளங்க. விரவி — பொருந்தி. சங்கு அணங்கிய — சங்குகள் வருந்திப் பெற்ற. சலஞ்சலம் — சலஞ்சலம் என்னும் ஒரு வகைச் சங்குகளினால் செய்த. அலம்பு — ஒலிக்கின்ற. தவளக் கங்கணங்களும் —வெண்ணிறக் கை வளைகளும். இலங்கிய — விளங்குகிற. காம் — கைகளில். பிறழவே — விளங்கவே.]

சத்தமிடும் பாம்பு போல!

கைவளைகள், தோள் வளைகள் கிலுகிலுக்க விராதன் வருகிறான் என்பதுதான் பாட்டின் பொருள். இவ் வளைகளைக் கை நிறையத் தோள் நிறைய அடுக்கிக் கொண்டு இக் கிலுகிலுப்பிலே, குழந்தைகளுக்குக் கிலுகிலுப்பையிலுள்ள களிப்பை அனுபவித்துக் கொண்டு வருகிறான். இப்படி வருவதே இவனை ஒரு அநாகரிக ராட்சஸக் கோமாளி என்பதைக் காட்டுகிறது.

இனி, பொருளை விட்டு விட்டுப் பாட்டைமட்டும் பாடிப் பாடிப் பாருங்கள். பாடிப் பாடி மானஸிகமாய்க் கேளுங்கள். சத்தம் போடாமல் ஊர்ந்து வந்து விடும் பாம்பைப் போல் விராதன் வரவில்லை; எச்சரிக்கை செய்வது போல், சத்தமிட்டுக் கொண்டே வந்து சேரும் (rattle-snake) ஒருவகைப் பாம்புபோல் 'கணகண, சலசல, கரகர' என்று வளைகள் ஒலிக்க வந்து தோன்றுகிறானும்.

போர் தெரியாது!

இவன் பளிச்சென்று சீதையை ஒரு கையால் தூக்கிக் கொண்டு ஆகாச மார்க்கமாய்ப் புறப்பட்டதும், 'அடா! வஞ்சனையர்க எங்கே நழுவி விடப் பார்க்கிறாய், திரும்பிவா' என்று ராமலட்சுமணர்கள் அதட்டுகிறார்கள். இவனும், 'அடா!' என்று அலட்சியமாகப் பதில் சொல்லத் தொடங்கி, 'உயிர்ப் பிச்சை தந்தேன்; போய் விடுங்கள்' என்று எச்சரிக்கிறான்.

ராமனோ புன்னகை பூத்த வதனத்துடன், 'போர் தெரியாது இவனுக்கு!' என்று, தன் கோதண்ட வில்லை நாணேற்றி டங்காரம் செய்தான். அப்போது விராதன் சீதையைக் கீழே விட்டு விட்டு, ராமன் எதிரே வந்து நின்று தன் கொடிய சூலாயுதத்தைச் சுழற்றி வீசினான். அதை உடனே ராமபாணம் இரண்டு துண்டாக்கி விட்டது. இச்சண்டை சிறிது நேரம் நடைபெற்றது.

சோகத்தின் வேகம்

ராமலட்சுமணர், 'இவன் கையை வெட்டித்தள்ள வேண்டும். இல்லாவிட்டால் போர் செய்து கொண்டேயிருப்பான்' என்று இவன் தோளில் ஏற, இவனும் அவர்களைத் தூக்கிக் கொண்டு வேகமாய்ச் சென்றான்; சுமந்தபடியே சுற்றித் திரிந்தான். அப்போது சீதை அடைந்த சோகத்தை என்னென்பது?

முதன் முதல் துவண்டு விழும் பூங் கொம்பு போலப் புழுதியில் விழுந்தாள். ஆனால் அப்படி விழுந்தவள் — என்ன அதிசயம்! — மறு கணமே எழுந்திருந்து விராதனைப் பின் தொடர்ந்து ஓடினளாம். நடுங்கிக் கதறிக் கொண்டிருந்த சீதைக்குத்தான் இப்போது எவ்வளவு தைரியம்! அவள் இவனை நோக்கி 'அவர்களை விட்டு என்னையே உணவாகக் கொள்வாய்!' என்று அழுது வாய்குழறி வேண்டிக் கொள்கிறாள். காதலனுக்காகவும், அவன் தம்பிக்காகவும் தன்னையே பலிகொடுக்கத் துணிந்த காதலியின் சோகம் எவ்வளவு அதிசய ஆற்றல் வாய்ந்தது!

கோமாளிச் சட்டை தான்!

'அண்ணா! தேவி இவ்வளவு துயரம் அடையும்படி நீ விளையாடுவது சரியோ? இவனை விரைவில் கொல்ல வேண்டும்' என்று லட்சுமணன் சொல்ல, ராமன் புன்சிரிப்புடன் ஹாஸ்யமாக, 'இவன்மேல் ஏறிச் சவாரி செய்துகொண்டு விரைவில் நாம் போகவேண்டிய வழியின் எல்லையைத் தாண்டுவது நலம் என்று நினைத்தேன்! இப்போது இவன் சாவதா ஒரு பெரிய காரியம்?'' என்று பதில் சொல்லு



கிறான். ராமன் இந்த ராட்சஸனை ஒரு கோமாளி அல்லது பூச்சாண்டியாகவே மதித்துவிடுகிறான் என்பது குறிப்பு.

ராமன் ராட்சஸக் கோமாளியைக் காலால் உதைத்து வீழ்த்தியதும், இவன் குபேர சாபத்தால் தான் பெற்றிருந்த ராட்சஸ உடலை விட்டுப் பழைய திவ்ய ரூபத்தை அடைகிறான். முட்டைக்குள்ளிருந்து பறவை வெளிப்படுவதுபோல் ராட்சஸ உடம்பிலிருந்து ஒளிமயமான தேகியாய் வெளிப்பட்டதும், முன்னைப் பிறவியின் நினைவு முற்றும் வந்து விடுகிறது.

ஒளி மேனியும் ஞான ஒளியும்

புதிய விராதன்—பழைய யட்சன்—ராமனைத் தோத்திரம் செய்யத் தொடங்குகிறான் :

வேதங்கள் அறைகின்ற
உலகெங்கும் விரிந்தன நின்
பாதங்கள் இவை என்னின்,
படிவங்கள் எப்படியோ ?
ஓதம்கொள் கடல் அன்றி
ஒன்றினோ(டு) ஒன்(று)ஒவ்வாப்
பூதங்கள் தொறும் உறைந்தால்,
அவைஉன்னைப் பொறுக்குமோ ?

[அறைகின்ற – துதித்து முழக்குகிற. என்னின் – என்றால். படிவங்கள் – வடிவங்கள் ; (இங்கே) அவயவங்கள் ; மற்ற அவயவங்கள். ஓதம் கொள் – குளிர்ச்சி கொண்ட. ஒவ்வா – ஒவ்வாத, ஒத்திராத. பூதங்கள் – மண், தீ, காற்று முதலியன. உறைந்தால் – (நீ) வசித்தால். பொறுக்குமோ – தாங்க வல்லனவோ ?]


தன்மேல் எறியும் உதைத்தும் கொல்வது போலத் தீண்டிக் கடைத்தேறச் செய்த திருவடிகளைத் தோத்திரம் செய்கிறான் விராதன். வேதங்களெல்லாம் தோத்திரம் செய்யும் திருவடிகள், இப்போது சிறியனவாய்த் தோன்றிய போதிலும், எப்போதும் திருவருளின் அறிகுறியாகி, உலகங்களெல்லாம் விரிந்திருக்கிறனவாம்.

பாதங்களே இப்படிப் பரவி யிருந்தால், மற்ற அவயவங்கள் எப்படியோ ?— என்று அதிசயிக்கிறான். இப்பாதங்களை அவயவமாகவுடைய முழுத் திருமேனியும் எப்படியிருக்குமோ ?— என்று பிரமிக்கிறான்.

பௌராணிகர், கடலில் பள்ளி கொண்டிருக்கிறார் பெருமாள் என்கிறார்களே ; கடல் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய நீரின் அம்சம்தானே ! மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களிலும் மறைந்து உறைகின்றான் என்பர் ஞானிகள் : அதுதான் எப்படிப் பொருத்தமாகும் ? அப்படித் தங்கினால், அந்தப் பூதங்களால் பொறுக்கமுடியுமா பரம் பொருளை ? பொம்மைகளா கோபுரம் தாங்குகின்றன ? கோபுரம் அல்லவா பொம்மைகளைத் தாங்குகிறது ?

எனினும் கோபுரத்தைத் தாம் தாங்குவனபோல் தோன்றும்படியாக அழகிய பொம்மைகள் அமைக்கப் படவில்லையா ? இப்படித்தான் சிருஷ்டிப் பெருஞ் சிற்பத்தில் கடவுள் தங்குவதும், இதைத் தாங்குவதும் !

ராமன் கால் பட்டதும் விராத மூளையில் பிறந்த தத்துவ ஞானம் இது. ராட்சஸப் பூச்சாண்டி, சாபத்திற்கு முன்னுள்ள திவ்ய தேகத்துடன் திவ்ய ஞானத்தையும் பெற்றுவிட்டான்.



பி. ஸ்ரீ.

213. ஏழையான சர்வாதிகாரி

ராமனுடைய அருளால் விராதனுக்குச் சாபவிமோசனம் கிடைத்ததுடன் தத்துவ ஞானமும் கிடைத்தது; பழைய திவ்ய தேகத்துடன் புதிய திவ்ய ஞானக் கண்ணும் கிடைத்து விட்டது. இந்தக் கண்ணால் பார்த்ததும், தன்னை உதைத்துத் தள்ளிய திருவடிகள் உண்மையில் தனக்கு அருள் செய்ய வந்த அடிமலர்களே யென்பதும், உலகெங்கும் பட்சபாதமில்லாமல் மலர்ந்து பரந்து கிடக்கும் திருவருளின் ஸ்தூல வடிவமே என்பதும் தெளிவாகி விட்டன.

விராதன் துதி

ஆரும் துணையின்றிக் காற்றுடிபோல் எங்கும் திரிந்து அறம் காக்கும் திருவருளே மானுடச் சட்டை போர்த்து ஊனக் கண்ணுக்கும் இலக்காகி விட்டது! பரம்பொருள் அறம் காத்துத் தன்னைப் போன்றவர்களுக்கும் அருள் பொழிவதற்காகப் பிறக்கவும் இறக்கவும் துணிந்து விட்டதே! 'இப்படியும் ஒரு விளையாட்டா?' என்று ஒரே வியப்பில் மூழ்கிப்போகிறான் விராதன்.

கடவுளைத் தந்தையென்று சொல்வதைக் காட்டிலும் 'உலகின் தாய்' என்று கூறுவது பெரிதும் பொருத்தமுடையதல்லவா? அப்படியானால் தாயை அறியாத கன்று உண்டா? 'கன்றாகிய உலகம் உன்னை அறிந்து கொள்ளவில்லையே!' என்கிறான்.

மெய்யைததான் சிறி(து)உணர்ந்து,
நீவிதித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ?
உனக்கென்ன குறையுண்டோ?

[விதித்த - நியமமாக ஏற்படுத்திய. மன் உயிர்கள் - நிலை பொருந்திய உயிர்கள்.]

என்று கேட்டுவிட்டு, மேலும் தோத்திரம் செய்துகொண்டிருந்த விராதனை நோக்கி ராமன், அவன் சொன்னதை யெல்லாம் உணர்ந்து

கொள்ளாதவனைப் போல், 'அப்பா! உன் வரலாற்றைச் சொல்லு' என்று கேட்டான். அந்த விகாரமான—கோரமான—ராட்சஸக் கூட்டில் இந்தத் திவ்ய சரீரி தங்கியதற் காரணம் என்ன?—என்பதை அறிய விரும்பினான்.

விராதன் கதை

விராதன் தன் கதை சொல்லத் தொடங்கினான். இருளடைந்த ராட்சஸ உடம்பு குழியின் மண்ணிலே கிடக்கிறது. கந்தர்வ ரூபம் வான வீதியில் திவ்ய ஒளி வீசுகிறது. 'ஆ, ஆ! அந்த உடம்பிலா நாம் இருந்தோம்?' என்று நினைக்கும்போது, கந்தர்வனுக்குத் தான் இப்போது எவ்வளவு அருவருப்பு உண்டாகிறது!

தன் பழைய ராட்சஸ வாழ்க்கை எவ்வளவு குற்றம் பொருந்தியது, எவ்வளவு கள்ளம் நிறைந்தது!— என்ற நினைவு வருகிறது:

கள்ள மாய
  வாழ்வெலாம்
விள்ள ஞானம்
  வீசு தாள்
வள்ளல்! வாழி
  கேள் எனா
உள்ள வா(று) உ-
  ணர்த்தினான்.



[விள்ள — நீங்க. தாள் — திருவடி. வள்ளல் — வள்ளலே. எனா — என்று.]

இருள் மயமான அந்தக் கள்ள வாழ்க்கையிலே ஞான ஒளி வீசித் தன் குளிர்ந்த நல்லருளால் விடுதலை அருளிய ராமசந்திரனை 'விள்ள ஞானம் வீசு தாள் வள்ளல்' என்று வாயார ஆசை தீர அழைக்கிறான். அத்தகைய வள்ளலை வாழ்த்தித் தன் கதை சொல்லுகிறான்.

குபேர நகரமான அளகாபுரியில் ரம்பை என்ற தெய்வப் பெண் நடனம் செய்து கொண்டிருக்கிறாள். நடனசாலை — என்ன அதிசயம்! — நீண்டு வளர்ந்துகொண்டே போகிறது. முடிவில்லாத நடனசாலையில் முடிவில்லாத நடனம் (an endless dance upon an endless theatre) நடந்துகொண்டிருக்கிறது,—ரசிகர் கண்களிலே! ஆடிக் கொண்டே வரும் தேவரம்பை நடனமேடையில் வசதியான ஓரிடத்திலே நின்று ஆடுகிறாள். சபையோரை யெல்லாம் ஒருங்கே வசீகரிக்கும்படி ஆடுகிறாள், பாடுகிறாள். பாடிக்கொண்டே ஆடுகிறாள்; ஆடிக்கொண்டே பாடுகிறாள். ஆட்டத்திற்கு இசைந்த பாட்டு; பாட்டிற்கு இசைந்த ஆட்டம்.

இந்த வசீகர ஆட்டத்தையும், இதன் விளைவுகளையும் கம்பன் பாட்டிலேயே பார்த்துவிடுவோம்:



ஆட ரம்பை நீட ரங்(கு)
ஊடு நின்று பாடலால்,
ஊடல் வந்து கூடஇக்
கூடு வந்து கூடினேன்!

[ஆடரம்பை - ஆடு அரம்பை. நீட ரங்கு - நீடு அரங்கு, நீளும் நடன சாலை. அரங்கு ஊடு - அரங்கினிடையே. ஊடல் - ஊடுதல்; காதலர் கலகம்.]

ரம்பை இப்போது ஒரு காதல் - நாடகத்தைத் தன் ஆடல் பாடலால் அபிநயித்துக் காட்டுகிறாள். காதலர்கள் எவ்வளவு காதலோடு ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள்; திடீரென்று பிணங்கி எவ்வளவ அதிருப்தியுடன் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள்! காதலர் உலகில் சமாதானத்தைக் காட்டிலும் சண்டை பரஸ்பர நேசத்தைத் தூண்டி வளர்ப்பதும் உண்டு. இப்படிப்பட்ட ஒரு காட்சியை ரம்பையின் நடன வாயிலாக நாட்டியப் பிரியரான ரஸிகர்களெல்லாம் கண்டு பரவசமாகிறார்கள்.

ஒரு கந்தர்வன் மட்டும் ரஸிகர்களைப் போல் ரஸிக்க வில்லை. அவன் சிற்றின்ப உணர்ச்சியுடன் தானே காதலனாகி, நாளடைவில் அந்த நடன மாதைக் காதலியாக்கிக் கொள்ளுகிறான். அவர்களுக்கிடையே காதல் - நாடகங்களும் காதல் - சண்டைகளும் நடைபெறுகின்றன. கந்தர்வக் காதலன் தன் கடமையை மறந்து மையலிலே தாழ்கிறான். இதை அறிந்த குபேரன் அந்தக் கந்தர்வன் தாழ்ந்த ராட்சஸனாக வேண்டுமென்று சபித்து விடுகிறான்.

இக் கதை முழுமையும எவ்வளவு சொற்செட்டுடன் ஒரு சின்னஞ் சிறு விருத்தத்தில் அமைந்திருக்கிறது, பாருங்கள்.

ஆட ரம்பை நீடரங் கு)
ஊடு நின்று பாடலால்

என்ற அடிகளின் வாயிலாக நாட்டியப் பெண்ணின் சிலம்புகளும் மேகலை யும் கூட நம்முடைய காதில் அப்படியே ஒலி செய்வது போல் தோன்று கிறதல்லவா ?

கந்தர்வனின் காதல் காம நோயாகி, அவன் அறிவை மறைத்துக் கந்தர்வ சுபாவத்தையும் மறைத்து விடுகிறது. ராட்சஸ குணம் காட்டிய கந்தர்வனுக்குக் குபேர சாபத்தால் ராட்சஸ சரீரம் கிடைக்கிறது. எனினும் இப்போது தான் அந்தக் கூட்டிலிருந்து வெளிப்பட்டு வந்த கந்தர்வன் தனக்குக் கிடைத்த தண்டனை அதிகமான தென்றும், யஜமா னன் நீதியோடு இரக்கத்தைச் சிறிதும் கலக்கவில்லை யென்றும் சொல்லு கிறான் :

கரக்க வந்த காமநோய்
துரக்க வந்த தோமினால்
இரக்கம் இன்றி ஏவினான்
அரக்கன் மைந்தன் ஆயினேன்.

[கரக்க — மறைக்கும்படி. துரக்க — (அறிவைப்) போக்க. தோம் — தோஷம், குற்றம்.]

பலருக்கும் ஒரு சுய சரிதம்


'ஐயோ! அந்தக் கூட்டிலிருந்து நான் இந்நாள் வரை என்ன செய்து கொண்டிருந்தோம்? என்ன சம்பாதித்துக் கொண்டிருந்தோம்?' என்று கணக்குப் பார்த்து,

அன்று மூல ஆதியாய் !
இன்று காறும் ஏழையேன்,
நன்று தீது நாடலேன்.
தின்று தீய தேடினேன்

[மூலம் — முதலாக. ஆதியாய் — முதல்வனான ராமனே. இன்று காறும் — இன்று வரையிலும். நாடலேன் — நாடாத நான்.]

என்று ஒப்புக்கொள்கிறான்.

அந்த ஆ ணியப் பகுதிக்கு ஒரு சர்வாதிகாரி போல் இருந்த விராதன் அந்த நிலையில் தன்னை 'ஏழை' என்று ஒப்புக் கொள்வது கவனிக்கத் தக் கது. இது விராதன் சுயசரிதை. ஆனால், 'உணவே பரம்பொருள் ; பிறரை ஹிம்ஸித்தும் நம் வயிற்றை நிரப்புவதே பேரின்பம்!' என்ற கொள்கையுடன் உயர்ந்த லட்சியங்களை அறவே மறந்திருக்கும் பலருக்கும் இது ஒரு பொதுவான ஆத்ம சரிதமல்லவா ?



பி. ஸ்ரீ.

214. வைத்திய ராமன்

ஊனக் கண்ணால் விராதன் பார்த்த ராமன் வேறு; ஞானக் கண்ணால் பார்த்த ராமன் வேறு. அந்த ராட்சஸக் கண்களுக்கு முதல் முதல் ராமன் ஒரு பகைவனாகவும் தோன்றவில்லை. தன் பகைமைக்கும் தகுதி வாய்ந்தவனாகத் தோன்றவில்லை; தன் கவனத்திற்கே உரியவனாகத் தோன்றவில்லை. கண்டதும் ஓடிப்போய் விடுவார்கள் என்று தான் எண்ணினான்: அவ்வளவு அசடு. ராமன் வீரவாதம் செய்து அதட்டியபோதும் அரக்கன் அலட்சியமாக, 'உயிர்ப்பிச்சை தந்தேனடா!' என்று தான் கர்ஜித்தான். 'ஓஹோ, போர் அறியாத — பசி ஒன்றே அறியும் — சிங்கம் இது!' என்று வீரப் புன்னகை புரிந்து ராமன் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கியபோதுதான், எதிரியாக மதித்துக் கோபிக்கிறான் விராதன். அதே ராமன் எப்படி மாறிப் போய்விட்டான் இப்போது ஞானக்கண்ணுக்கு! ஓர் உபகாரியாக அல்லவா தோன்றுகிறான்?

விராதனுக்கு ரண வைத்தியம்

உபகாரியென்றால் சாதாரண உபகாரியா? ஒருவன் பிளவை நோயால் வருந்திக் கொண்டிருக்கிறான். என்ன கஷ்டம்! 'மரணந்தான் இந்த மரணத் துன்பத்தைப் போக்கக் கூடும்!' என்று துடிக்கிறான், துடி துடிக்கிறான். அப்போது ஒரு ரண வைத்தியன் வலிய வந்து பிளவையை அறுத்துச் சிகித்ஸை செய்து குணப்படுத்தி விடுகிறான் என்றால், அந்த நோயாளி எவ்வளவு நன்றியுள்ளவனாயிருப்பான்! அவனைப் புத்துயிர் தந்த உத்தம உபகாரி என்று போற்ற மாட்டானா?

இதே நோயாளி, தன்னைக் காப்பாற்ற வந்த ரணவைத்தியனை எதிரி போல மதித்து அறிவு — மயக்கத்தால் அவனுக்கு ஏதாவது கேடு செய்திருந்தானென்று வைத்துக் கொள்ளுங்கள். பிறகு உண்மை — நிலையை உணர்ந்து கொண்டதும், 'என்ன அறிவுகேடனாக நடந்து கொண்டேன்! எப்பேர்ப்பட்ட குற்றவாளி நான்!' என்று பச்சாத்தாபப் படுவானல்லவா? இது தான் இப்போது ஞானக்கண் பெற்ற விராதனுடைய நிலையும்.

விராதன் வாக்கு மூலமாகவே பார்த்து விடுவோம்:

'தெறுத்து வந்த
தீதெலாம்
அறுத்த உன்னை,
ஆதனேன்
ஒறுத்த தன்மை,
ஊழியாய்!
பொறுத்தி' என்று
போயினன்.

[தெறுத்து – (உயிரைக்) கெடுத்து. ஆதனேன் – அறிவு கேட ஞகிய நான். ஒறுத்த – வருத்திய; கஷ்டப்படுத்திய. ஊழியாய் – ஊழி முதல்வனுகிய ராமனே. பொறுத்தி – பொறுத்தருளுவாயாக.]

கொலையும் கருணையா?

செய்த தீமைகளெல்லாம் ஆத்மாவுக்கே வந்த பிளவை போல் ராட்சஸ வடிவமாகி வருத்திக் கொண்டிருந்ததாம். 'அந்தப் பிள வையை அறுத்துக் குணப்படுத்திய ரண வைத்தியனுகிய உனக்கு நான் எவ்வளவு நன்றி உள்ளவனுயிருக்க வேண்டும்! என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகுமா? அப்படியிருக்க, நான் அளித்த வைத்திய தட் சிணை தான் என்ன? உனக்குக் கஷ்டம் அளிக்க முயன்றது தானு? அறிவு கேடனுகிய நான் எத்தகைய பெருங் குற்றத்தைச் செய்து விட்டேன்! பொறுத்தருள்வாயாக. உன்னைத் தவிர யார்தான் இந்நிலையில் பொறுத் தருள முடியும்?' — இது விராதன் பிரார்த்தனை.

'துஷ்ட நிக்கிரகம் என்ற வியாஜத்தால் விராதனைப் போன்ற தீயோருக்கும் நன்மை புரிய வந்த கருணைக்கடல் ராமன்!' என்ற அவ தார ரகசியத்தை விராதன் வாக்காகக் குறிப்பிடுவது எவ்வளவு ரஸமா யிருக்கிறது! துஷ்டர்களும் பரம்பொருளின் குழந்தைகளே. நல்லவர் களை அறக்கருணையால் திருத்துவது போல் அல்லாதவரை மறக் கருணை யால் திருத்துகிருன் இறைவன். 'அறக் கருணையானுலும் மறக்கருணை யானுலும், கருணை கருணை தான்!' என்பது குறிப்பு.

கவலையும் களிப்பும்

விராதன் போய் விட்டான். ஆம், சூட்சுமரூபியான கந்தர்வன் போய் விட்டான். ஞானக் கண்ணுல் விராதன் கண்டு பேசியதை ஞானச் செவியால் வாங்கிக் கொண்டான் ராமன். 'அரக்கன் இறந்து போய் விட் டான்' என்று தான் ராமன் கண்களுக்கும் தெரிகிறது, மானுடப் பண் பிற்கு இசைந்த விதமாக.

வெற்றி வீரான ராமலட்சுமணருக்கு அவ்வளவு வெற்றிக் குதூகல மில்லை; அம்புகளை ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு போகிருர்கள். இன்னும் எத்தனை ஆபத்துக்களோ? இப்போதுதானே ஆரணியத்தில் ராட்சஸ உலகத்தைச் சிறிது அறிந்து கொள்ளத் தொடங்கி யிருக்கிருர் கள் விராதன் மூலமாக. இறங்கும் துறையே இப்படி யிருந்தால்! சீதை யை அபகரிக்கவும் முயன்றுனே!

சீதையோ, பூவிலிருந்து பூவுக்குத் தாவும் மைனுவைப் போல், குதி போட்டுக் குதூகலமாய்ப் போகிருளாம், பொறுப்பும் சிறிது கவலையும் பொருந்திய முகத்துடன் செல்லும் வீர சகோதரர்களுடன் :

பூவு லாவு
பூவையோ(டு)
ஏவ லாரும்
ஏகினர்

[பூ உலாவு - பூவிலிருந்து பூவுக்குக் குதித்து உலாவுகிற. பூவை – நாகணவாய்ப்புள் ; மைனு; (இங்கே) மைனுவைப் போன்ற சீதை. ஏவலார்—அம்பில் வல்லவர்கள்.]

'பூவுலாவு பூவை' என்ற சொற்றொடரும், பொதுவாக இந்த அடிகளும், சீதையின் அந்த உத்ஸாக வழிநடைச் சித்திரம் தான் !

முனிவரும், தேவராஜாவும்

ஸீதா ராம லட்சுமணர்களைக் காட்டு வழிகளில் இழுத்து வந்து விராதனுக்குச் சாபம் தீர்க்க உதவிய விதியானது, இவர்களை மேலும் காட்டுக்குள் இழுத்துச் சென்று, அடுத்தபடியாக ஒரு கிழ முனிவருக்கும் வைத்தியம் செய்விக்கிறது. இம் முனிவர் சரபங்கர் என்ற பெயருடன் தவத்திலே பழுத்த பெருங் கிழவராக விளங்கினர்.

இம் முனிவரது ஆசிரமத்தை ராமன் முதலியோர் அடைவதற்கு முன், அங்கே வேறொரு விருந்தாளி வந்திருந்தானும்.



அவன் தான் தேவேந்திரன். வெண்ணிற ஐராவத யானைமேல், கொற்ற வெண் குடைக் கீழ் வந்து சரபங்கரை நோக்கி, "உம்முடைய தவத்தை மெச்சிப் பிரம்மதேவர் தம்முடைய உலகத்திற்குத் தாங்கள் விருந்தாளியாக வந்து அங்கேயே குடியேறி விடவேண்டும் என்று அழைத்து வரும்படி என்னை அனுப்பியிருக்கிறார்" என்றான். முனிவரோ அந்தப் பதவியை அற்ப மென்றே கருதி விட்டாராம். 'தவத்தின் விளைவாகப் பிறவி வைத்தியனாகிய, ராமனைப் பார்க்கப் போகிறோமே!' என்று மகிழ்ந்திருந்தவருக்கு இந்திரன் பிரம்மனும் பொருளாகத் தோன்றவில்லை.

நெல்வளமும் குணவளமும்

ராமனைக் கண்ணுற்றதும், 'பிரமனுடைய நிலை எவ்வளவு அற்பமானது!' என்று இப்போது இந்திரனுக்கே தோன்றுகிறது. சரபங்க முனிவருடைய கொள்கை சரிதான் என்று படுகிறது. இந்திரன் ராமனை எப்படிப் போற்றுகிறான், பாருங்கள் :


நாழி நவைதீர் உலகமெலாம் ஆக,
 நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவும் நின்(று) அளந்தால், என்றும்
 உலவாப் பெருங்குணத்த உத்தமனே!

[நாழி - அளவு கருவி. நவைதீர் - குற்றம் தீர்ந்த. நளினத்து - தாமரையில். நான்முகனார் - பிரம்ம தேவர். ஊழி பல பலவும் - பல பல யுகங்களாக. நின்று அளந்தால் - நின்று அளந்து கொண்டிருந்தாலும். என்றும் உலவா - எப்போதும் அளந்துமுடியாத. பெருங்குணத்த - மிக்க குணங்களையுடைய.]

ஒரு பெரிய பண்ணையில் மலையாய்க் குவிந்து கிடக்குமே, தானிய ராசிகள், அப்படிக் காண்கின்றனவாம், ராமன் பெருங் குணங்களும். பழைய சோழவள நாட்டில் சடையப்பனது செல்வளமான தானிய மலையைப் பார்த்தால், 'இந்தப் பெருங்குவியலை இவன் எப்படி அளந்துவிடப் போகிறான்!' என்று மரக்காலும் கையுமாக எதிரே நிற்கும் அளவுகாரனைக் கண்டு, நாம் வியந்து பேசக்கூடும்; சென்னை நகரவாசிகள் ஏங்கிப் போகவும் கூடும்! அப்படி ஏங்கிப் பிரமித்துப் போகிறான் தேவேந்திரன், ராமனுடைய அனந்த கல்யாண குணங்களையும், பிரமனுடைய நிலையையும் அகக்கண்ணால் பார்க்கும்போது.

புருஷோத்தமனுடைய குணங்களாகிய தானிய மலைக்கு எதிரே நின்று அளக்கப் பார்க்கிறானும் பிரமன். மரக்கால் பாய்ச்சி அளக்க முயல்கிறான் என்று கூடச் சொல்லவில்லை; பிரமன் கையிலுள்ள அளவுகருவியோ ஒரு நாழிதான்! (உலகமே அந்த நாழியாக அமைந்தால்தான் என்ன!) 'என்ன பேதைமை! கைக்காண்டி கொண்டு கடலை அளந்து வற்றச் செய்வது போலத்தான்!' என்பது குறிப்பு.

இத்தகைய ராமனைத் தரிசிக்கப் போகும் பாக்கியசாலியான தவமுனிவர், நாழியும் கையுமாய் ராம குணாதிசயமாகிற தானிய மலைக்கெதிரே நின்று வேர்த்து விரு விருத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் பிரமனை எப்படி மதித்திருப்பார்! இந்த ஞானோதயம் இப்போது ஏற்பட்டிருக்கவேண்டும் தவராஜாவைத் தேடிவந்த தேவ ராஜாவுக்கும்.



பி. ஸ்ரீ.

215. ஞான நெருப்பு

ராமனைப் பார்க்கப் பார்க்க, தோத்திரம் செய்யச் செய்ய, இந்திரனுக்கு ஞானக்கண் மட்டுமல்ல, ஆராய்ச்சிக் கண்ணும் நன்றாகத் திறந்து விட்டதுபோலத் தோன்றுகிறது. 'எந்த ஒன்றிலிருந்து இந்தப் பல உருவங்களும் தோன்றினவோ, அந்த ஒன்றே ஆதிமூலம்' என்ற அந்த ஞானம் நன்கு புலனாயிற்று.

ராமனை அந்தப் பரம ஞானத்தின் கொழுந்தாகவும், தேவர்களின் குறைகளைப் போக்க வேண்டுமென்றே மூல உருவை எங்கேயோ ஒளித்து வைத்து விட்டு இங்கே பிறந்திருக்கும் தெய்வ நாயகமாகவும் காண்கிறான் தேவராஜா.

தீவினைப் பிரசினை

தேவர்களையும் நல்வினையாளர்களையும் பாதுகாக்கவும், தீவினையாளர்களை ஒழித்து விடவும் ராமன் அவதரித்திருக்கிறான் என்பது இந்திரனுக்குத் தெரியும். ஆனால் அந்த மூலப்பொருளி லிருந்து தானே எல்லாம் தோன்றி யிருக்கவேண்டும்: அப்படியானால் தீவினை எப்படி வந்தது?

தீவினையும் நல்வினைபோல் அந்த ஆதிமூலத்தி லிருந்து தோன்றியது தானா? அந்த அழகிய பெருங் குணங்களின் மூலத்திலிருந்து தீவினை முளைக்குமா? இந்தப் பிரசினை இந்திரனுள்ளத்திலே பளிச்சென்று மின்னிடுகிறது. '.கடவுள், சாத்தான்' என்று இரண்டு ஆதிமூலங்களை ஒப்புக்கொள்வதில்லை இந்து வேதாந்தம்.

இந்த நிலையில் இந்திரனுடைய தோத்திரத்தையே கேட்கலாம்:

ஒன்றாகி மூலத்(து), உருவம் பலவாகி,
உணர்வும் உயிரும் பிறிதாகி, ஊழி
சென்(று) ஆ சறுங்காலத்(து) அந்நிலைய தாகித்
திறத்(து)உலகம் தானாகிச், செஞ்செவே நின்ற

நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே! நங்கள்
நவைதீர்க்கும் நாயகமே! நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி, அயல் - பேரைக் காய்தி;
நிலையில்லாத் தீவினையும் நீதந்த தன்றே?

[மூலத்து - மூலத்திலே; வேரிலே. பிறிதாகி - வேறும் ஆகி; (அதாவது) உடலும் ஆகி. ஊழி சென்று - மகாப் பிரளயம் உண்டாகி. ஆசறும் - முடிவுபெறும். காலத்து - காலத்தில். அங்நிலையதாகி - அப்போதுள்ள நிலைமையாகி. திறத்து - பல திறப்பட்ட. செஞ்செவே - மிகவும் செவ்வையாக. நன்றாய - நன்றாகிய; நல்ல. நன்றாய ஞானம் - தத்துவ ஞானம். நவை - குறைகள். காத்தி - காத்தருள்கிறாய். அயல் பேரை-நல்வினை கருதாமல் அதர்மம் செய்கிறவர்களை. காய்தி - நிக்கிரகம் செய்கிறாய். தந்ததன்றே - தந்ததல்லவா?]

வேரிலிருந்து விருட்சம் தோன்றிப் பல கிளைகளைப் பரப்புவது போலக் கடவுளும் பலவேறு உருவங்களாய்க் கிளைத்திருக்கிறாராம்; உணர்வும் உயிரும் உடலுமாகக் காட்சி தருகிறாராம். மகாப் பிரளயம் ஏற்பட்டு எல்லாம் முடியும் காலத்தில், அப்போதுள்ள அம்முடிவு நிலையிலும் கடவுள் முடிவு பெறாமல் இருக்கிறாராம். அம்முடிவு - காலமும் முடிந்து, மீண்டும் படைப்புச் சக்தி தழைக்கும்போது, மறுபடியும் உலகங்கள் தோன்றுகின்றன: கடவுளே பல திறப்பட்ட உலகங்கள் ஆகிறாராம். இப்படி எத்தனையோ பரிணாமங்கள் — படைப்பு, பாதுகாப்பு, துடைப்பு, விடுதலை, பாசபந்தம்...!

இம் மாறுதல்களெல்லாம், விகற்பங்களெல்லாம் கடவுளாகிய ஆதி மூலத்தை மாற்றி விடுவதில்லை. தத்துவ ஞானத் தனிக் கொழுந்தாக அவர் அன்றும் இன்றும் என்றும் காட்சி தருகிறார். 'அத்தகைய கடவுளே, ஞானச் சுடர்க்கொழுந்தே, ராமனாக வந்திருக்கிறது, எங்கள் குறைகளைப் போக்குவதற்கு. ஆகவே, ராமன் தெய்வ நாயகம், தெய்வ ஜோதி, மானுடச் சட்டையில் இருந்த போதிலும்!' என்கிறான் இந்திரன்.



நல்லது செய்து நல்லவரா யிருக்கும் நல்வினையாளர்களை எப்போதும் காப்பாற்ற வந்து சேர்கிறாராம் தெய்வக்கனலான கடவுள். அப்படியே தீவினையாளர்களைச் சிட்சிப்பதும் நிச்சயம் தானாம். 'ஆனால்...' என்று ஒரு சந்தேகம், இந்த இடத்தில் இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்படுகிறது இந்திரனுக்கு.

'ஆதிமூலத்திலிருந்து எல்லாம் வந்திருக்க, வளர்ந்திருக்க, விளைந்திருக்க, கிளைத்திருக்க, இந்தத் தீவினை எங்கிருந்து, எப்படி முளைத்துவிட்டது?' என்று, தத்துவ சாஸ்திரிபோல், தன் மூளையைக் குழப்பிக் கொள்கிறான் இந்திரன்.

'நிலையில்லாத் தீவினை'

தீவினையும் எப்படியோ வந்து விட்டது உலகத்திலே. அந்த மூலத்திலிருந்துதானே நல்வினைப் பயிர்போல் தீவினைக் களையும் தோன்றியிருக்க வேண்டும்? வேறு மூலம்தான் கிடையாதே? ஆனால், நல்ல வேளை, தீவினை நிலையில்லாதது; தன்னைத் தானே மாய்த்துக்கொள்கிறது; தர்ம மூலச்சுடராகிய கடவுளது தர்மாவேசம் என்ற நெருப்பிலே பிரவேசித்து வெந்து போகிறது:

நிலையில்லாத் தீவினையும்
நீதந்த தன்றே!

இத் தீவினை ஏன் முளைத்திருக்க வேண்டும்? நிழல் வேண்டுமானால் வெயிலும் இருக்க வேண்டுமல்லவா? சுகம் வேண்டுமானால் துன்பமும் இருக்க வேண்டுமல்லவா? 'துன்புளது எனின் அன்றோ, சுகம் உளது?' என்று குகனை நோக்கி ராமன் ஆறுதல் கூறினான் அல்லவா? 'தீவினை ஏன்?' என்பதற்கு விடையும் இது போலத்தான் இருக்கக்கூடும். ஸ்ரீதேவி பிறந்த பாற்கடலிலே மூதேவி பிறந்த கதையும், இத்தகைய பிரசினையின் கற்பனை யுருவமாயிருக்கலாம்.



உண்மையான தத்துவ விசாரம்

இத்தகைய தத்துவ விசாரத்திற்குப் பின் போகமூர்த்தியான இந்திரன் தன் போக பூமிக்குப் போய் விட்டான். அன்ன விசாரமின்றி அமிர்தம் பொங்கி வந்து வாயில் பாயும் நாட்டிலே தத்துவ விசாரம் ஏது? அங்கே தேவபோகத்திலும் அமிர்த பானத்திலும் இந்தக் கவலைகளை மறந்து விடுவான் தேவராஜன் என்று கருதலாம். இத்தகைய ஒரு போக பூமியை நிலை பெற்ற தத்துவ ஞானியும் தவசியுமான சரபங்க முனிவர் எப்படி விரும்புவார்?

முனிவர் ராமனை வரவேற்றார்; எதிர்கொண்டு வந்து அளவளாவினார். ராமனைப் பரமபத நாதனாகவே — மூலப் பொருளாகவே — முனிவரும் கண்டார். ஆனால் இந்தத் தத்துவஞானம் தவத்திலே தோன்றியது; ஆகவே போகத்தில் மறையாதது; ஏன், போகத்தைப் பொருளாக மதிக்காது. மதிக்காமல் தானே, இந்திரலோக இன்பங்களையும் பிரம்மலோகப் பட்டம் பதவிகளையும் மறந்துவிட்டார்.

ராமனைக் கண்ணுற்றதும் முனிவருக்கு அழுகை வந்து விட்டதாம். ராமனை வாழ்த்தினார்; 'சீதையும் இளையவனும் வருக' என்று அவர்களையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அழகனான ராமனும் அறிஞரான முனிவரின் ஞான உரையைக் கேட்டு மகிழ்ந்தான். சீதையும் லட்சுமணனும் முனிவர் கூறிய மொழிகளைக் கேட்டு இன்புற்றார்கள். இவர்கள் முனிவரின் ஆசிரமத்திலே இரவைக் கழித்தார்கள்.

அக்கினிப் பிரவேசம்

சூரியன் தன் கிரணக் கைகளால் இருளாகிய போர்வையை விலக்கிக் கொண்டு உதயம் செய்தான். முனிவர் திடீரென்று அக்கினிப் பிரவேசம் செய்யச் சித்தமாகிறார். ராமன் காரணம் கேட்கச் சரபங்கர், தாமும் தம் மனைவியும் ராமனைத் தரிசிப்பதற்காகவே உயிரை வைத்துக் கொண்டிருந்ததாகவும், இனி ராமன் அருளால் அக்கினிப் பிரவேசத்தை வியாஜமாகக் கொண்டு பரமபதப் பிரவேசம் செய்யப் போவதாகவும் பதில் சொல்லுகிறார்.


அழகும் இனிமையும்

ரிஷி-தம்பதிகள் அக்கினிப் பிரவேசமானதும் சீதா ராம லட்சுமணர் பரிதவிக்கும் நெஞ்சினராய் அந்த ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டார்கள். மலைப் பிரதேசங்களையும், மரங்கள் நிறைந்த காட்டுப் பிரதேசங்களையும் தாண்டி வருகிறார்கள். வழியில் எத்தனையோ அழகிய கற்பாறைகள், அழகான காட்டாறுகள், உள்ளத்தை அள்ளிப்பருகும் அருவிச் சாரல்கள், இனிய பூங்காவனங்கள், ஆழமான தடாகங்கள் — இவற்றையெல்லாம் கண்விருந்தாகக் கண்டு களிக்கும்போது, சரபங்க ஆசிரமத்தில் தோன்றிய தாபமும் ஒருவாறு நீங்கியது இவர்களுக்கு:

மலைகளும் மரங்களும்,
மணிக்கற் பாறையும்,
அலைபுனல் நதிகளும்,
அருவிச் சாரலும்,
இலைசெறி பழுவமும்,
இனிய சூழலும்,
நிலைமிகு தடங்களும்,
இனிது நீங்கினார்.

[மணிக்கற் பாறை — அழகிய கற்பாறைகள். அலைபுனல் — அலையின்ற நீர். சாரல் — மலைப் பக்கம். செறி — அடர்ந்த. பழுவம்-சோலை. சூழல் - சுற்றுப்புறங்கள். நிலைமிகு - ஆழம் மிகுந்த. தடங்கள் - தடாகங்கள்.]

சரபங்கரின் மறைவு இனி ஒரு புனித நினைவுதான்.



பி. ஸ்ரீ.

216. வனத்திலே, மும்மணிகள்

காட்டுத் தீ பச்சை மரங்களையும் சாம்பலாக்கி வருகிறது. கடல் பொங்கி வருவது போல் அந்தத் தீச் சுடரும் பொங்கிப் பாய்ந்து பரவி வருகிறது. அக் காட்டின் ஒரு பக்கத்திலே சில உலர்ந்த மரங்கள் ஒதுங்கி நிற்கின்றன. பச்சை மரம் படும் பாட்டில் வற்றி உலர்ந்த மரங்கள் (உலவை) தப்பிப் பிழைப்பது எப்படி? ஆனால், ஆனால் — என்ன அதிசயம், பாருங்கள்! — பச்சை மரங்களுக்கு இல்லாத அதிர்ஷ்டம் உலர்ந்த மரங்களைத் தேடி வந்து விட்டது. அதோ திடீரென்று பெரு மழை பெய்து தீயை அணைத்து விடுகிறது.

இது தண்டக வனத்து முனிவர்களின் நிலை:

அனல்வரு கானகத்(து),
அமு(து)அ ளாவிய
புனல்வர உயிர்வரும்
உலவை போல்கின்றார்!

[புனல் — நீர்; (இங்கே) மழைநீர்ப் பெருக்கு. உலவை — உலர்ந்த மரங்கள்.]

கடல் வருவது போல் அனல் பொங்கிப் பாய்ந்து சூழ்ந்து வரும் கானகத்திலே, அந்த உலர்ந்த மரங்கள் 'தொலைந்தே போனோம்!' என்று ஏங்கி நிராசையாய் நிற்கும் போதே மழை வந்து விடுகிறதாம். அமுதம் அளாவிய மழை என்கிறான் கவிஞன், அந்த நிலையில் அந்த உலர்ந்த மரங்களின் உள்ளுணர்ச்சியை அப்படியே வெளியிடுவது போல.

முதல் மணி

அமுத தாரையாக, அமுத வெள்ளமாக மழை இறங்க, அப்புனலை எதிர்கொண்டு உயிர் வருகிறதாம் உலவைகளுக்கு:

புனல்வர உயிர்வரும்
உலவை.



'புனல்வர உயிர்வரும்' - 'அமுதளாவிய புனல்வர உயிர் வரும்' - எவ்வளவு எளிமையான சொற்றொடரில் பெரும் புதைபொருள்! மழைமுகம் காணாது வாடிக்கிடக்கும் பயிர்-முகம் பார்த்து, எதிர்பாராத மழையில் அப்பயிர் பச்சைகளுக்கு வரும் உயிரை, பசுமையை, ஜீவகளையை எவ்வளவு அனுதாபத்துடன் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்திருக்கிறது கவியுள்ளம்!

கரன்முதலான கொடிய அரக்கர்களின் இருப்பிடத்திற்கு அருகே, அவர்களுடைய கடுங்கோபத்தால் வெதும்பிக் கொண்டிருக்கும், தவித்துக் கொண்டிருக்கும், பரம சாதுக்கள் எப்படிப்பட்ட பரிதாப நிலையில் இருந்தார்கள் என்பதையும், ராமனைக் கண்ணுற்றதும் அவர்களின் உள்ளம் எப்படிக் குளிர்ந்து தளிர்க்கிறது என்பதையும், இந்த உபமானம் எவ்வளவு பொருத்தமாக வெளியிடுகிறது!

எனினும், இந்த உவமையோடு கவிஞன் திருப்தி அடையவில்லை. அந்த முனிவர்கள் 'முண்டரும் மோனருமா'க இருந்து தவம்புரிந்தார்களாம். 'முண்டர்' என்றால் முற்றும் பற்று இல்லாத தங்கள் மனநிலைக்கு ஓர் அறிகுறியாகத் தலையை மொட்டையடித்துக் கொண்டவர்கள்.





'மோனர்' மௌனவிரதமுடையவர்கள். இவர்கள் உள்ளுக்குள்ளே சிவ நாமங்களையோ விஷ்ணு நாமங்களையோ தியானித்துக் கொண்டிருந்தவர்கள். இப்போது ராட்சஸ பயம் அதிகரிக்க அதிகரிக்க, அந்த ஈசுவர நாமங்களை மறந்து, தங்கள் மௌனவிரதத்தையும் மறந்து அரக்கர் பெயர்களையே வாய் குழற நாக்கு நடுங்கச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம். 'அதோ வந்துவிடுவார்களோ? இதோ வந்துவிடுவார்களோ? கரன் வந்துவிடுவானோ? தூஷணன் வந்துவிடுவானோ? அகம்பன் வந்து விடுவானோ? இலங்கையிலிருந்து இந்திரஜித்தே வந்து குதித்து விடுவானோ?' என்றெல்லாம் நடுங்கிக் குழம்பிக் கொண்டிருக்கிறார்களாம். பயம் செய்யும் நாம ஸங்கீர்த்தனம்!

இரண்டாவது மணி

இத்தகைய மனக் குழப்பத்திற்கும், பிறகு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் தாவரவர்க்க உபமானம் (உலர்ந்த மரமும் தீயும் புனலும்) போதாதென்று, அதை விட்டுப் பிராணி வர்க்கத்தின் துயரத்தைக் குறிக்கும் வேறொரு உபமானம் தருகிறான் கவிஞன் :

தீவரு வனத்திடை
விட்டுத் தீர்ந்ததோர்
தாய்வர நோக்கிய
கன்றின் தன்மையார்!

தீப்பற்றி எரியும் அதே காடு தான். அக்காட்டின் நடுவே ஒரு தாய்ப் பசுவும் கன்றும் மேய்ந்து கொண்டிருக்கின்றன. தீயைக் கண்டதும் பயந்து ஓட்டம் பிடிக்கின்றன, பசுவும் கன்றும், அது ஒரு திசையில், இது ஒரு திசையில். பயத்தால் ஒன்றும் தோன்றாமல் தாய்ப் பசு கன்றையும் விட்டு எங்கேயோ ஓடிப்போய் விடுகிறது. தீயோ உலர்ந்த மரங்களையும் பச்சை மரங்களையும் ஒரே அடியாகச் சாடி வருகிறது. அப்போது அந்த அநாதைக் கன்று என்ன பாடு படும்! எப்படிப் பரிதவித்துக் கொண்டிருக்கும்! இதே நிலையில் இருந்தார்களாம் தண்டகாரணிய முனிவர்கள்.



'தாயைப் பார்ப்பேனா' என்று ...

அக்கன்று, தன் தாய் திடீரென்று மீண்டு வருவதைப் பார்க்கிறதென்றால் அப்போது அது எவ்வளவு குதூகலத்தை அடையும்!—அவ்வளவு குதூகலம் ராமனை நோக்கும் முனிவர்களுக்கு.

'எவ்வளவு பொருத்தமான உபமானம் இது!' என்று நாம் வியந்து கொண்டிருக்கும்போதே, இந்த உபமானமும் கவிஞனுக்குப் பூர்ணதிருப்தி அளிக்கவில்லையென்று தெரிந்து கொள்கிறோம். எதிர்த்துப் போர் செய்ய இடமில்லாமல், அரக்கர்களின் கொடுமைகளையெல்லாம், அந்த அவமானங்களையெல்லாம் சகிக்க முடியாமல் சகித்துக்கொண்டு மனம் புழுங்கச் சோர்ந்து, 'பாதாளத்திற்குள்ளே அமிழ்ந்து கொண்டிருக்கிறோமோ?' என்ற அதி பயங்கர அபாய மன நிலையில் இருக்கும் முனிவர்களை நம் மனக்கண் முன் கொண்டுவர இன்னும் ஓர் உபமானம் தேவையாகிறது.

மூன்றாவது மணி

இந்த உபமானத்தில் கவிஞன் பிராணி வர்க்கத்தையும் விட்டு மனித வர்க்கத்திற்கே வந்து விடுகிறான். காட்டுத் தீ மறைந்து, அலைகடல் கண்முன் விரிகிறது. புயற்காற்று வீசுகிறது. அலைகள் மலைகளாக எழுகின்றன. கொடுங் காற்று ஓய்ந்ததும் அந்தக் கொந்தளிக்கும் கடல் நடுவே சிலர் மிதந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

அவர்களுக்குக் கரையும் தெரியவில்லை, திசையும் தெரியவில்லை. அந்த இடத்தில் ஏதோ ஒரு கப்பல் முழுகிப் போய் விட்டதென்று ஊகிக்கிறோம். மிதந்து கொண்டிருப்பவர்கள் முகத்தைத் தண்ணீருக்கு மேல் வைத்துக்கொள்ள முயன்று போராடுகிறார்கள். போராடப் போராட அமிழப் பார்க்கிறார்கள்.

அவர்களைச் சிறிது தூரத்தில் சூழ்ந்து கொண்டிருக்கின்றன சுறா மீன்கள். அவர்களை இரையாக்கிக் கொள்ளவேணுமென்று இன்னும் பெரிய பெரிய மீன்கள் வருகின்றன. இந்த நிலையில் விதியின் விசித்திரத்தைப் பாருங்கள்: அங்கே ஒரு கப்பல் வந்து விட்டது..... ...

மூர்ச்சை தெளிந்ததும் அவர்கள் அந்தக் கப்பலில் குளிருக்கு அடக்கமாய்ச் சுகமாக, வசதியாக இடம் பெற்றிருப்பதாய் அறிந்து கொள்கிறார்கள். இது தண்டகாரணிய வாசிகளான முனிவர் நிலை என்று காட்டுகிறான் கவிஞன்:

அரக்கரென் கடலிடை
ஆழ்கின் றார், ஒரு
மரக்கலம் பெற்றென
மறுக்கம் நீங்கினார்!

[என் கடல்—என்ற கடல். பெற்றென—பெற்றாற் போல. மறுக்கம்—மனக் கலக்கம்]

இப்படி ஒன்றின் ஒன்று உச்சமாக மூன்று உபமானங்களில், தண்டக வனத்துச் சாதுக்களின் பிராண ஆபத்தான பயங்கர நிலையும், அதற்கு எதிர்த்தட்டாக அவர்கள் அடைந்த பரம சந்தோஷ நிலையும் ஒருங்கே சித்திரிக்கப் படுகின்றன.



பி. ஸ்ரீ.

217. பகலே இல்லாத தினங்கள்

உடம்பைச் சோற்றுத் துருத்தியாகக் கொண்டிருந்தான் விராதன். 'உணவே கடவுள்; (பிறரை ஹிம்ஸித்து) உண்பதே பேரின்பம்' என்ற கொள்கை யுள்ளவர்களெல்லாம் விராதனுடைய நிலையிலுள்ள அரக்கர்கள்.

நன்று நீது நாடலேன்;
தின்று தீய தேடினேன்

என்ற கொள்கையோடு கூடிய விராதனுக்கும் மூளையுண்டு; ஆனால் அவன் வயிற்றை வளர்த்து மூளையைப் பட்டினி போட்டுப் பகுத்தறிவை மழுக்கி விட்டான். ராட்சஸ உலகில் இவனுக்கும் கீழான படியில் உள்ளவன் உண்டு.

கபந்த நிலை

அவன்தான் கபந்தன். பட்டினி போட்டு மழுக்குவதற்கு மூளை யென்று ஒன்று இருந்தால் தானே? கைக்கும் வாய்க்கும் இடையே மூளை வந்து குறுக்கிடும் தொல்லையே கபந்தனுக்குக் கிடையாது. கபந்தனுக்கு வயிற்றிலே வாய்! கழுத்தின்மேல் வாய் இருந்தால் அதற்கு ஒரு மேல்-மாடம் தேவையாகிறது. அந்த மேல்-மாடத்திலே மூளை குடிபுகுந்து சேட்டை செய்கிறது. ஆம், மனக்குரங்கு பகுத்தறியப் பார்க்கிறது! விராதனுக்கு இருந்த உபத்திரவம் கபந்தனுக்குச் சிறிதும் இல்லை.

மாரீச நிலை

ராட்சஸ உலகத்திலே விராதனும் கபந்தனும் தாழ்ந்த படியில் இருக்கும் சாமானியர்கள். அந்த இருளுலகத்திலே மூளையை மிக மிகக் கூர்மை செய்து கொண்டவர்களும் உண்டு. 'மகாபாரதத்திற்குச் சகுனி மாமா; ராமாயணத்திற்கு மாரீச மாமா!' என்று சொல்வதுண்டு. இந்த மாரீச மாமா அறிவை அபாயமாகத் தீட்டிக் கூராக்கிக்

கொண்டவன் — மகா வஞ்சக மாயாவி. இந்த மாயாவி தன் மாயா விநோதங்களால் சீதா ராமர்களையே ஏமாற்றி விடுகிறான்.

விராதனும் கபந்தனும் மூளையில்லாதவராய்க் குற்றம் செய்தார்கள் என்றால், மாரீசன் முதலான அரக்கர்கள் தங்கள் அபாயமான மூளைக் கூர்மையால் இன்னும் எவ்வளவு அதிகமான குற்றங்களையும் கொடுமைகளையும் செய்யக்கூடும்!

ராட்சஸ ஏகாதிபத்தியம்

இந்த ராட்சஸ உலகத்திற்குத் தலைவர்கள் இலங்கை அரக்கர்கள். ராட்சஸ பலத்தோடு ராட்சஸ அறிவும் உடையவர்கள். செயல் — திறமோ அபாரம். பொருள் முதலான எல்லா வசதிகளும் அபாரமாய் உண்டு.

உலகத்திலுள்ள சிறந்த பொருள்கள் எல்லாம் இலங்கைக்கு வந்து விடுகின்றன. (அத்தகைய சுரண்டல் - கொள்கையை ராட்சஸ ஏகாதிபத்தியம் மேற்கொண்டிருந்தது.) சிறந்த யானைகளெல்லாம் எல்லா மலைநாடுகளிலிருந்தும் இலங்கைக்கு வந்து சேர வேண்டியது தான். உயர்ந்த யானைகளில் 'பிள்ளையார் யானை' (யானைமுகக் கடவுளான கணபதி) தவிர வேறு யானைகளெல்லாம் இலங்கை - அரக்கர்களுக்குப் பணி செய்ய வந்து விட்டனவாம்.

இல்லாத பொருள்

இத்தகைய ராட்சஸ பூமியில் குவிந்து விட்ட பொருள்களைக் கணக்கிட யாரால் முடியும்? கணக்கிட்டுப் 'பட்டியல்' தயாரிக்கவே இந்தக் கம்பராமாயணம் போதுமா? ஆங்கிலக் கம்பரான ஷேக்ஸ்பியர்தான் போதுமா? ஆகவே, இலங்கையில் இல்லாத பொருளை மட்டும் தண்டகாரணிய முனிவர்கள் ராமனிடம் குறிப்பிடுகிறார்கள். அங்கே இல்லாத பொருளைக் குறிப்பிடுவதோ மிகவும் எளிது. 'ஒரே ஒரு பொருள் தான் அங்கே இல்லை' என்கிறார்கள்.

அது எது? செல்வப் பொருள் அன்று; அறிவுப் பொருள் அன்று. வேறு எது, தெரிய வேண்டாமா?

இரக்கம்என்(று) ஒருபொருள்
இலாத நெஞ்சினர்,
அரக்கர்என்(று) உளர்சிலர்,
அறத்தின் நீங்கினர்

என்பது முனிவர்களின் வாக்கு. இரக்கம் இல்லாத இடத்தில் அறம் ஏது? அறத்திற்கு ஆணிவேர் இரக்கம்தானே?

இலங்கை அரக்கரும் தண்டக முனிவரும்

இம்முனிவர்கள் இலங்கையரக்கர்களை ராமனுக்கு அறிமுகப்படுத்துவதே எவ்வளவு ரஸமாகவும் இசைவாகவும் இருக்கிறது! 'இரக்கம் என்ற ஒரு பொருள் நெஞ்சில் இல்லாவிட்டால், கோடிக் கணக்காகப் பொருட் குவியல்கள் இருந்தும் பயன் என்ன? இரக்கம் இல்லாதவர். அரக்கர்! அன்றும்தான், இன்றும்தான் இரக்கம் போனால் அறமும் போய் விடு

கிறது' என்ற பொருளெல்லாம் பொதிந்து கிடக்கிறது மேலே காட்டிய அடிகளில்.

ஒரு சமயம் கோகலே என்ற தேச பக்தர், இந்திய தேச பக்தர்களுக்குப் பரம விரோதியாயிருந்த கர்ஸன் (Curzon) என்ற வைஸிராயைக் குறித்துப் பேசும்போது, "இந்த அரசப் பிரதிநிதிமீது தேவர்கள் தங்கள் வரப்பிரசாதங்களை யெல்லாம் அபரிமிதமாய்ப் பொழிந்தார்கள். ஆனால் — ஐயோ! — தேவர்கள் பொறாமைக்காரர்கள்! 'அதிகமாய்க் கொடுத்து விட்டோமே, ஏதாவது ஒன்றையாவது எடுத்துவிட வேண்டியதுதான்!' என்று நினைத்தார்கள். இரக்கம் என்ற அனுதாப உணர்ச்சியைத்தான் எடுத்து விட்டார்கள். அதனால் கூர்மையான அறிவு வாய்ந்த வைஸிராயாலும் தமது ஆட்சியில் இருந்த அன்னிய மக்களின் உணர்ச்சிகளை அறிந்து கொள்ள முடியவில்லை" என்றார்.

புலியும் மானும்

இரக்கம் இல்லாத கர்ஸன் பிரபுவால் இந்தியர்களை அறிய முடியவில்லையென்றால், இரக்கம் இல்லாத அரக்கர்களாலும் முனிவர்களை அறிந்து கொள்ள முடியவில்லை. அறத்தினின்றும் நீங்கிய அரக்கர்கள், முனிவர்களையும் அறத்தினின்றும் நீக்கி விட முயன்றார்கள். முனிவர்களுடைய இந்த நிலையை என்னென்பது?



வல்லியம் பலதிரி
  வனத்து மான்என,
எல்லியும் பகலும்நொந்(து)
  இரங்கி ஆற்றலெம்:
சொல்லிய அறநெறித்
  துறையும் நீங்கினெம்;
வில்லியல் மொய்ம்பினாய்!
  வீடு காண்குமோ?

[வல்லியம் — புலிகள். திரி — திரிகின்ற. எல்லி — இரவு. இரங்கி — (இங்கே) வருந்தி. ஆற்றலெம் — சகிக்க முடியாதவர்களாய் இருக்கிறோம். நீங்கினெம் - நீங்கினோம். வில் இயல் - வில் பொருந்திய. மொய்ம்பினாய் - தோளையுடையவனே. வீடு - விடுதலை.]

'புலிகள் பல திரிந்து கொண்டிருக்கும் காட்டில் அகப்பட்டுக் கொண்ட மான் போல் இருக்கிறோம்' என்று சொல்லும் முனிவர்கள், தாங்கள் நீங்கிய அந்தத் தருமநெறி இன்னதென்று விவரிக்கிறார்கள். அம்முனிவர்களுடைய சுதர்மம் :— (1) தவம் புரிவது; (2) வேதம் ஓதுவது; (3) ஓதுகிறவர்களுக்கு உதவி செய்வது; அதாவது, வேதம் ஓதுவிப்பது; (4) வேள்வித் தீ வளர்ப்பது. 'இம்முறையில் நீங்கி விட்டதால், நாங்கள் அந்தணர்களில்லை!' என்கிறார்கள் :

ஆதலின் அந்தண ரேயும் ஆகிலேம்!

'அந்தணராவது பிறப்பாலன்று; செய்தொழிலின் சிறப்பினால் தான்' என்பது கம்பன் கொள்கை.


இரவும் இரவியும்

கடைசியாக முனிவர்கள் தங்களுடைய பரிதாப நிலையையும், ராமனது வருகையால் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையையும் எவ்வளவு பொருத்தமான உபமானத்தால் தெரிவித்துப் பேச்சை முடிக்கிறார்கள்:

'உருளுடை நேமியால்
  உலகை ஓம்பிய
பொருளுடை மன்னவன்
  புதல்வ! போக்கிலா
இருளுடை வைகலேம்!
  இரவி தோன்றினாய்!
அருளுடை வீர! நின்
  அபயம் யாம்' என்றார்

[உருளுடை - உருளுதலை உடைய; எங்கும் உருண்டு செல்லுகிற. நேமியால் - ஆக்ஞா சக்கரத்தினால். ஓம்பி - காத்த. பொருள் உடை - பொருள் முதலான வசதிகளை உடைய. மன்னவன் புதல்வ - தசரத சக்கரவர்த்தியின் புதல்வனே! போக்கு இலா - போகவே செய்யாத. வைகல் - நாள். வைகலேம் - நாளை உடையவர்களாய் இருக்கிறோம்.

பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள் என்று தானே எல்லாரும் சொல்லுகிறார்கள்? தண்டகாரணிய வாசிகளோ, தங்களுடைய நாளில் பகலை கிடையாது, விடிவே இல்லாத ஒரே இரவு தான் எப்போதும்! — என்கிறார்கள். 'அத்தகைய இரவிலே இப்போது தான் சூரியோதயம் ஆகிறது; அதிகாலை, அருணோதயம் ஆகிய அந்தக் கிரமம்கூட இல்லாமல் சூரியோதயமே ஆகிவிட்டது!' என்கிறார்கள்.



பி. ஸ்ரீ.

218. தியாக சித்தாந்தம்

உலகத்திலே தெய்வ வாழ்வு வாழ்வதைக் குறித்துத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர்,

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன், வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்
படும்

[வையத்துள் — உலகத்திலே. வாழ்வாங்கு — வாழும் முறைப்படி. வான் உறையும் — வானத்தில் வாழும். வைக்கப்படும் — வைத்து எண்ணப்படுவான்.]

என்ற ஓர் அருமையான குறளில் பாடி வைத்திருக்கிறார். வாழும் முறைப்படி வாழ்கிறவன் மண்ணுலகில் வாழ்ந்த போதிலும் விண்ணுலகில் வாழும் தெய்வங்களில் ஒன்றாய் மதிக்கப்படுவான் என்பது பொருள். இக் குறள் ‘இல்வாழ்க்கை’ என்ற அதிகாரத்தில் அமைந்திருப்பதால், இல் வாழ்க்கையிலேயே தெய்வ வாழ்க்கை வாழமுடியும் என்பது திருவள் ளுவர் கருத்து.

தெய்வ வாழ்வு எது?

வாழும் முறை குறித்துப் பல கொள்கைகள் வெளியிடப் பெற லாம். ஆனால் இக்குறளுக்கு ஒரு வியாக்கியானம் செய்வதுபோல் கம்பன் அந்த வாழ்வுமுறையைக் குறித்துத் தன் கொள்கையை வெளியிட்டிருக் கிறான். அதிலும், ராமன் கொள்கையாக வெளியிட்டிருக்கிறான்.

தண்டகவனத்து முனிவர்களுக்கு அபயம் அளிக்கும்போது ராமன்,

ஆவுக் காயினும்,
அந்தணர்க் காயினும்,
யாவர்க் கானும்,
எளியவர்க் காயினும்,

சாவப் பெற்றவ
ரே,தகை வானுறை
தேவர்க் கும்தொழும்
தேவர்கள் ஆகுவார்!

[ஆ — பச. அந்தணர் — (இங்கே) அருளாளர்களான பெரியோர். யாவர்க்கானும் — எவருக்கானாலும். சாவப் பெற்றவரே — (உதவி செய்து) உயிரைக் கொடுக்கும் பேறு பெற்றவரே. தகை வான் — அழகான சுவர்க்கம். உறை — வசிக்கிற.]

என்ற தியாக புருஷர்களின் மதத்தை வெளியிட்டு, அதுவே தனக்கும் சம்மதம் என்கிறான்.

திருவள்ளுவர் தெய்வ வாழ்வைப் பேசுகிறார் என்றால், அதே வாழ்வின் பகுதியாக, ஏன், சிகரமாகக் கம்பன் தியாக மரணத்தைப் பேசுகிறான். வாழ்வு என்றால் மரணமும் சேர்ந்தது தானே? தியாக மரணத்தைத் 'தெய்வ மரணம்' என்றும் கம்பன் வேறொரு சமயத்தில் குறிப்பிடுகிறான்.

'தெய்வம் போல வாழலாம்; ஆனால் தெய்வம் போல மரணம் அடைய முடியுமா? தெய்வம் மரணம் அடையுமா?' என்று கேட்கக் கூடும். 'தியாகிகளுக்கு மரணமே கிடையாது, அவர்கள் அமரராகிறார்கள். மரணம் தான் மரணம் அடைகிறது!' என்பது அக்கேள்விக்கு விடை. தியாக மரணம் தியாக வாழ்வின் சிகரம், மணிமகுடம். முடி துறந்த ராமன் விரும்பும் மணிமுடியைப் பாருங்கள்!

தியாகமூர்த்திகளிடம் வேறொரு விசேஷ அருங்குணமும் உண்டு. அவர்கள் தங்கள் உடல் பொருள் ஆவிகளையும் தியாகம் செய்வதுடன், பிறரையும் அப்படியே செய்யும்படி தூண்டுவார்கள். தங்கள் துன்பங்களை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதோடு, தங்களைச் சேர்ந்தவர்களின் துன்பங்களைக் குறித்தும் பெருமை பாராட்டிக் கொள்வார்கள். காந்தி யடிகள் தமது சத்தியாக்கிரக இயக்கங்களில், உத்தியோகஸ்தர்களையும் வக்கீல்களையும் ஏழை மக்களையும் பள்ளிப் பிள்ளைகளையும் கூடத் தங்கள் உத்தியோக நிலயங்களையும் நீதிமன்றங்களையும் வீடு வாசல்களையும் பள்ளிக்கூடங்களையும் துறந்து, 'என்னுடன் சேர்ந்து துன்பம் அனுபவிக்க வாருங்கள்' என்று அறைகூவ வில்லையா?

ராம - சத்தியாக்கிரகம்

இவ்விசேஷ அருங்குணம்—இந்தத் தியாக சித்தாந்தம் — ராமனிடத்திலும் காணப்படுகிறது. முனிவர்களை நோக்கி ராமன் சொல்லுகிறான்:

'வேந்தன் வீயவும்,
தாய்வரம் ஏவவும்,
ஏந்தல் எம்பி
வருந்தவும் என்நகர்
மாந்தர் வன்றுயர்
கூரவும் யான்வனம்
போந்த(து) என்னுடைப்
புண்ணியத் தாள்!' என்றான்.

[வேந்தன் — தசரத சக்கிரவர்த்தி. வீயவும் — இறக்கவும். தாய் — (இங்கே) கைகேயி. வரம் ஏவவும் — வரம் பெற்று ராமனை வனத்திற்குப்

போகுமாறு கட்டளையிடவும். ஏந்தல் — பெருமையில் சிறந்தவனாகிய. எம்பி — என் தம்பி பரதன். வன்துயர் — வல்துயர்—வலிய துன்பம், கொடிய துன்பம். கூரவும் — அதிகமாய் அடையவும். போந்தது — புறப்பட்டு வந்தது.]

'தான் விரும்பினால் ராமன் தியாகம் செய்து கொள்ளட்டும். ஆனால் தந்தையான சக்கிரவர்த்தி அவன் பொருட்டு மாணம் அடைந்தாரே! சிறிய தாயான கைகேயி வரம்பெற்றுப் பழி சூடினாளே! ஒரு குற்றமும் அறியாத சாந்தமூர்த்தியான தம்பி பரதனும் வருந்தி வாடிப்போனானே! அவர்களாவது உறவினர்கள். நகர மாந்தரும் எவ்வளவோ கொடிய துன்பத்தில் முழுதும்படி விட்டு விட்டது ராமனுக்குத் தகுமா? முறையா? அது தருமம்தானா?' என்றெல்லாம் அந்நாளிலும் ராம-சத்தியாக்கிரகத்தைக் குறித்து நிதானஸ்தர்கள், மிதவாதப் பிரமுகர்கள், கேள்வி கேட்டிருக்கலாம். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் ராமன் சொல்லத்தக்க விடை மேலே காட்டிய செய்யுளில் கிடைக்கிறது.

'அவர்கள் எல்லாரும் சத்தியாக்கிரகத் துன்பங்களில் பங்குகொண்டது நியாயம்தான்: அதுவே சத்தியாக்கிரக முறை, சத்தியாக்கிரக தருமம்' என்ற கொள்கையுடன் ராமன் பேசுவதுபோலச் செய்யுள் அமைந்திருக்கிறது. அத்தகைய சத்தியாக்கிரகமே லோகோபகாரம் என்பது ராமன் கருத்து. 'அவர்களெல்லோரும் துன்பங்களை அடையும்படி நான் வனத்திற்குப் புறப்பட்டு வந்ததனால் அல்லவா, உங்களுக்கு உதவி செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது?' என்று முனிவர்களை நோக்கிக் கூறும் மன நிலையை ஆழ்ந்து சிந்தியுங்கள்.



முடிவுரையும்,
முடிவில்லாத குதூகலமும்


இவ்விதமாகத் தனது தியாக சித்தாந்தத்தை எடுத்துரைத்து அம் முனிவர்களுக்கு நம்பிக்கையும் உத்ஸாகமும் உண்டாகும்படி முடிவுரையாகப் பின் வருமாறு பேசுகிறான் :

‘சூர்அ றுத்தவ –
னும், சுடர் நேமியும்,
ஊர்அ றுத்த
ஒருவனும் ஓம்பினும்,
ஆர்அ றத்தினொ’(டு)
அன்றிநின் றார்அவர்
வேர்அ றுப்பென் ;
வெருவன்மின் நீர்’ என்றான்.

[சூர் — சூரபத்மன். சூர் அறுத்தவன்—சூரபத்மனை வதஞ் செய்த சுப்பிரமணியக் கடவுள். சுடர்நேமி — சக்கிராயுதத்தையுடைய மகாவிஷ்ணு. ஊர் அறுத்த ஒருவன் — திரிபுரங்களை எரித்து அழித்த ஒப்பற்ற சிவபெருமான். ஓம்பினும் — காப்பாற்ற வந்தாலும். ஆர் — யார். அன்றி — பகைத்து. வெருவன்மின் — பயப்படாதேயுங்கள்.]

‘தரும தேவதை மட்டும் என் கட்சியில் இருந்தால் போதும்; வேறு தேவதைகள் எதிர்க் கட்சியில் இருந்த போதிலும் கவலையில்லை. தரும விரோதிகளை வேரறுத்து விடுவேன். பயப்படாதேயுங்கள்’ என்ற அபய தானத்தைப் பெற்றுக் கொள்ளும் முனிவர்கள் அடையும் ஆனந்த பரவசத்தை என்னென்பது?

விசேஷ கௌரவம் வாய்ந்த தங்கள் ஆசிரம தருமத்தின் அறிகுறியாகவுள்ள கோல்களை (தண்டங்களை)ப் பம்பரம் சுழற்றுவதுபோலச் சுழற்றி விடுகிறார்கள்! அந்த ஆனந்த பரவசத்திலே ஆடுகிறார்கள். தங்களை மறந்து குழந்தைகளைப் போல் நடந்து கொள்கிறார்கள்!



பி ஸ்ரீ.

219. அபயமும் யாத்திரையும்

ராமன் அபயதானம் அளிப்பதற்கு முன்பே — ஏன், இவனைத் தூரத்தில் கண்டதுமே அவர்களுக்கு நம்பிக்கை பிறந்து விட்டது. நம்பிக்கை மட்டுமோ? உள்ளத்திலே களிப்பும் ஊறியது — ஆம், உள்ளம் கள்வெறி கொண்டது போன்ற களிப்பு. அந்தக் களிப்பிலே திளைத்தனர், துள்ளினர், அமைதி பெற்றனர்.

சந்திப்பு

இருந்த இடத்திலிருந்து எழுந்து வந்தார்கள், அப்போதுதான் புதிதாய்த் திரண்டு வந்த நீலமேகத்தின் கொழுந்து போல நின்ற வீரனை நோக்கி.

தங்கள் உள்ளங்களில் வெள்ளமிட்டுப் பொங்கிய காதலைக் குடங் குடமாய் மொண்டு அபிஷேகம் செய்கிறவர்களைப் போல மொய்த்துக் கொண்டார்கள். ராமன் அவர்களைத் தனித் தனியே ஆசை தீரத் தொழுதான். தொழத் தொழ வாய் குளிர ஆசி சொன்னார்கள். அப்போதே, அந்தத் தொழுகையிலும் வாழ்த்திலுமே, பயம் போய் ராமனது அபயம் ஆரம்பமாகி விட்டதென்று கருதலாம் :

எழுந்தனர், எய்தினர் ;
இருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றஅக்
குரிசில் வீரனைப்
பொழிந்தெழு காதலிற்
பொருந்தி னார், அவன்
தொழுந்தொறும் தொழுதொறும்
ஆசி சொல்லுவார்.

[குரிசில் வீரன் — வீர சிரேஷ்டனாகிய ராமன்.]

தவித்த குடியானவர்கள் மேகத்தைக் கண்டது போலக் கண்டார்கள் முனிவர்கள். மேகம் தேடி வந்து விட்டது, கைம்மாறு கருதாது கருணை

பொழிவதற்காக. அழைத்துப் போய்த் தங்கள் துன்பத்தை அறிவித்ததும் அபயதானம் வெளிப்படையாகக் கிடைத்துவிட்டது.

என்ன கோஷம்! என்ன கூத்து!

அபய வாசகம் கேட்ட உவகை, அவனைக் கண்ட களிப்பின் சிகரம். அபயம் பயத்தை முற்றும் ஒழிக்க, முனிவர்களுக்கிடையே தான் என்ன கோஷம்! ஞானம், வயது, தவமுதிர்ச்சி, தன்னடக்கம், ஆசிரம கௌரவம், நாணம் எல்லாம் மறந்து, குழந்தைகள் போல் நடந்து கொள்கிறார்களாம்.

அந்த ஆனந்த பரவசத்தைக் கவிஞன் காட்ட நாமும் நேரில் கண்டு களிப்போம்:

உரைத்த வாசகம்
 கேட்(டு)உவந்(து) ஓங்கிட,
இரைத்த காதலர்,
 ஏகிய இன்னலர்,
திரித்த கோலினர்,
 தேமறை பாடினர்,
நிருத்தம் ஆடினர்,
நின்று விளம்புவார்.

[இரைத்த காதலர்-பொங்கி ஆரவாரம் செய்யும் கடல் போன்ற அன்புக் காதலை யுடையவர்கள். ஏகிய-நீங்கிய. இன்னலர்-துன்பத்தை யுடையவர்கள். திரித்த-(பம்பரம்போல் கையால்) சுழற்றிவிட்ட. கோலினர்-தண்டத்தை உடையவர்கள். தேமறை-இனிமையான வேதப் பாடல்கள். நிருத்தம்-நடனம், கூத்து. விளம்புவார்-சொல்லுவார்கள்.]

'ஸஹாராவைப் போல் வறண்டு கிடந்த உள்ளங்களில் அன்புக் கடல் பாய்ந்து பொங்கி அலைமேல் அலையெறிந்து ஆனந்த கோஷம் செய்யத் தொடங்கி விட்டதாம். அந்த அபய வார்த்தை கேட்டதும் துன்பம் தங்களை விட்டு நீங்கி வெகு தூரம் ஓடிப்போய் விட்டதாகவே ஓர் உணர்ச்சி, இப்போது அவர்களுக்கெல்லாம்.

அந்த ஆனந்தப் பெருக்கிலே தங்களையும் மறந்து, ராமனையும் மறந்து, குழந்தைகளைப் போல் நடந்துகொள்கிறார்கள். தங்கள் துறவுச் சின்னமான தண்டங்களைப் பிள்ளைகள் பம்பரம் சுழற்றுவது போலச் சுழற்றி விடுகிறார்களாம்.

வேதம் ஓதுவதை விட்டுத்தான் வெகு காலம் ஆகிவிட்டதே! 'வேதம் ஓதுகின்றோ மில்லை; விரும்புகிறவர்களுக்கும் ஓதுவிக்கின்றோ மில்லை. வேதம் மறந்து வேள்வித் தீயும் அவிந்து எவ்வளவு நாளாகி விட்டது! ஒழுக்க முறையும் தவறிவிட்டோம்; சுருங்கச் சொன்னால் நாங்கள் அந்தணரே இல்லை!' என்றெல்லாம் பிரலாபித்தார்க ளல்லவா? அந்த மறந்த வேதம் — மறைந்த மறை இப்போது வந்து விட்டதாம்.

வேத மந்திரங்கள் நினைவில் இருந்தால்தான் என்ன, அவர்கள் ஓத விரும்பினால்தான் என்ன? தொண்டைக்கு வெளியே புறப்பட்டால்

தானே: அவ்வளவு பயம் அந்த ராட்சஸப் பூச்சாண்டிகளை நினைத்ததுமே இந்த ஞானக் குழந்தைகளுக்கு! இப்போதோ உத்ஸாகமாக வேத கோஷம் செய்கிறார்களாம். அது பாட்டாகவும் வருகிறது; பாட்டு இனிமையாகவும் புறப்படுகிறது (தேமறை)! ஜுரம் போய்விட்டால், பால் ருசிக்காமல் என்ன?

முனிவர்கள் பாடிக் கொண்டே ஆடவும் தொடங்கி விட்டார்கள்! ஆட்டம் வரவர அதிகரிக்கிறது...... ராமன் எதிரே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது ஞாபகத்திற்கு வந்ததும், ரிஷிகள் ஆட்டத்தைத் திடீரென்று நிறுத்தி விடுகிறார்கள்.

பத்து ஆண்டுகள் கழிந்தன

பிறகு அவர்கள் ராமனை வாயாரப் புகழ்ந்து, 'எங்களுக்குத் துன்பம் வராமல் காத்துக் கொண்டே, நீ வனவாசம் செய்ய வேண்டிய ஆண்டுகளெல்லாம் இங்கேயே தங்கியிரு' என்று வேண்டிக் கொள்கிறார்கள்.





'இன்னல் காத்(து)இங்(கு)
இனி(து)உறை வாய்'எனச்,
சொன்ன மாதவர்—
பாதம் தொழு(து),உயர்
மன்னர் மன்னவன்
மைந்தனும் வைகினன்.

[இன்னல் – துன்பம். உறைவாய் – வசிப்பாய். மன்னர் மன்னவன் – தசரத சக்கிரவர்த்தி. வைகினன் – தங்கி யிருந்தான்.]

ராமன் முதலிய மூவரும் முனிவர் ஆசிரமங்களில் பத்து ஆண்டுகள் கழித்த பின் அகஸ்திய முனிவரது ஆசிரமத்தை நோக்கிப் புறப்படுகிறார்கள். ராமன் அங்கே போக வேண்டியது அவசியம் என்று தண்டக முனிவர்கள் நினைத்தார்கள். ராமன் வந்த காரியம் — தங்கள் காரியம் — நிறைவேறுவதற்கு ராமன் தங்களுடன் தங்கி யிருந்தால் போதாது என்று தெரிந்து விட்டதாம். 'தமிழ் முனிவரான அகஸ்தியரின் உதவி இன்றியமையாதது. அவரிடம் ராமன் ஆசியுடன் வில் முதலியனவும் பெறவேண்டி யிருக்கிறதல்லவா?' என்று முனிவர்கள் சிந்தையில் எண்ணி யிருக்க வேண்டும்.

பையப் பையப் போகிறார்கள்

ராமன் முதலானோர் இப்போது அடிவைத்த காட்டுவழி முன்னிலும் கஷ்டமானது. வெடிப்புள்ள இடங்கள், மூங்கில் அடர்ந்த காடுகள், இடையிடையே படர்ந்து செல்லும் சிறிய வழிகள். பையப் பையத் தான் மிகவும் ஜாக்கிரதையாகப் போக வேண்டி யிருக்கிறது:

விடர் அகங்களும்,
வேய்செறி கானமும்
படரும் சின்னெறி
பைப்பைய நீங்கினர்.

[விடர் அகம் — வெடிப்புள்ள இடம். வேய் — மூங்கில்கள். செறி — அடர்ந்திருக்கும். சின்னெறி — சில்நெறி — சிறிய வழிகள். பைப்பைய — பையப் பைய.]


விரைந்து போகிறார்கள்

இடையே ஒரு சோலையில் சுதீட்சணன் என்ற முனிவனைச் சந்தித்து வழி தெரிந்து யாத்திரையைத் தொடர்ந்து, அழகான வனம் நிறைந்த மலைச் சாரல் வழியாகச் செல்லுகிறார்கள்:

பிறியும் தேனிற்
பிறங்(கு)அரு வித்திரள்
பொழியும் சோலை
விரைவினிற் போயினர்.

[தேனிற்பிறங்கு அருவித்திரள் – தேன் கூடுகளிலிருந்து சிந்தும் தேன் கலந்து விளங்கும் அருவித் தொகுதி.]

மலையருவிகள், திரள் திரளாகப் பொழிகின்றன. அவற்றையும், பக்கத்து மரங்களில் தொங்கும் தேன் கூடுகளையும் சோலைகளையும் விரைவாகப் பார்த்துக் கொண்டே போகிறார்கள், தமிழ் முனிவரைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆசையுடன்.



பி. ஸ்ரீ.

220. தமிழ் முனிவர்

தமிழ் முனிவரைக் குறித்து ராமன் மற்ற முனிவர்கள் மூலமாக எத்தனையோ விஷயங்களையும் விசேஷங்களையும் கேள்விப்பட்டிருந்தான். இமய மலையிலிருந்து பொதிகை மலையில் வந்து குடியேறிய இம்முனிவர் பெருமான், பாரத நாட்டின் பண்பாடுகளுக் கெல்லாம் ஓர் உருவமாகவும், இந்நாட்டின் ஒருமைக்கு ஒப்பற்ற சான்றாகவும் விளங்குகிறார். சிறப்பாகத் தமிழை ஆராய்ந்து தமிழ்க் கலைகளுக்குப் புத்துயிர் அளித்ததாகக் கருதப்படுகிறார்.

கதைகள, கற்பனைகள்

அகஸ்தியர் தென்னிந்தியாவில் பிரவேசிப்பதற்கு முன் விந்திய பர்வதத்திற்குத் தெற்கே வடநாட்டினராகிய ஆரியர்கள் வந்ததில்லையென்று ஊகிக்கிறார்கள். அகஸ்தியர் தமிழரோடு தமிழராகி, ஆரிய — திராவிடக் கலைகளையும் பண்பாடுகளையும் இசைத்து ஒரு புதிய பெரிய கலப்பு நாகரிகத்தை உண்டாக்க முயன்றவர் என்கிறார்கள். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற கொள்கை வாய்ந்த தமிழர்கள் அகஸ்தியர் கதைகளை அலை கடல்களுக்கு அப்பாலுள்ள வெளி நாடுகளுக்கும் கொண்டு போய்ப் பரப்பி வைத்தார்கள்.

அகஸ்தியர் சிறந்த சிவபக்தர்; தமது பக்திப் பெருக்கால் 'சிவகுரு' என்று சைவர்களால் மதிக்கப் பெற்றவர். இவர் பொதிகை மலைக்கு வந்தது குறித்துப் புராணங்களில் ஒரு கதை காணப்படுகிறது. முன்னொரு காலத்தில் பார்வதி பரமேசுவரரின் திருமண விழாவை முன்னிட்டுத் தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலான யாவரும் ஒருங்கே இமயமலையைச் சார்ந்த கைலாசத்தில் கூடிவிட்டார்கள். அந்தப் பாரத்தினால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்து விட்டது. 'இருதிசையும் ஒப்ப நடுவு நிலைமை ஏற்படும்படி என்ன செய்யலாம்?' என்று ஆலோசித்த சிவபெருமான் அகஸ்தியரை நோக்கி, 'நீ தென்திசைக்குப் போய்ப் பொதிய

மலையில் தங்கவேண்டும்' என்று கட்டளையிட்டார். அந்தக் கட்டளைக்கு இணங்கி அகஸ்தியர் தமிழ் நாட்டுக்கு வந்தாராம்.

இக் கதையை எவ்வளவு நாட்டு அபிமானத்துடன், எவ்வளவு ரஸமாய்க் கம்பன் எடுத்துக் காட்டுகிறான் பாருங்கள் :

மூசரவு சூடுமுத
லோன்,'உரையில் மூவா
மாசில்தவ! ஏகென்ன,
வடாதுதிசை மேனாள்
நீசம்உற, வானின்நெடு
மாமலயம் நேரா,
ஈசன்நிக ராய்உலகு
சீர்பெற இருந்தான்!

[மூசு அரவு — வேகத்துடன் மூச்சுவிடும் பாம்புகளை. சூடு முதலோன் — ஆபரணமாய்ச் சூடிக்கொண்டிருக்கும் முதல்வராகிய சிவபெருமான். உரையில் — புகழில். மூவா — மூப்பு அடையாத. மாசுஇல்தவ — குற்றமில்லாத தவத்தை யுடையவனே. ஏகு என — போவாய் என்று கட்டளையிட. வடாது திசை — வடக்குத் திக்கு. மேனாள் — முன் ஒரு காலத்தில், நீசம்உற — தாழ்வை அடைய ; 'இக்கலைஞர் வந்து விட்டால் கலைச் செல்வம் இழந்து ' தாழ்ந்து போக. வானின் நெடு — வானளாவிய. மாமலயம் — பெரிய பொதிய மலை. நேரா — நேர்ந்து ; சேர்ந்து. ஈசன் நிகராய் — சிவபெருமானுக்கு ஒப்பாகி. உலகு சீர்பெற — தமிழுலகம் சமநிலையடைய ; தமிழுலகம் சிறப்பை அடைய.]

வடக்கும் தெற்கும் சமநிலை அடையவேண்டும் என்று தான் சிவபெருமான் அகஸ்தியரைத் தெற்கே அனுப்ப எண்ணினார். 'உயர்ந்திருக்கும் வடதிசை தாழ வேண்டும் ; தென்திசையும் வடதிசைக்கு நிகராக வேண்டும்' என்றுதான் விரும்பினார். அகஸ்தியர் என்ற கலைப் பெருஞ்செல்வத்தை இழந்ததும் வடக்குத் திசை தாழ்ந்தே போய்விட்டது (நீசம் உற்றது) — பண்பாடுகளை இழந்து விட்டது என்கிறான் கவிஞன். தமிழ் நாட்டின் பண்பாடு மிகவும் சிறந்தது என்பதும், அச் சிறப்பிற்குக் காரணம் அகஸ்தியர் வருகையால் குறிக்கப்பெறும் கலப்புநாகரிகம் என்பதும் கம்பன் கருத்து.

தமிழ் முனிவரின் தந்திரம்

இப்படித் தமிழ்நாடு சீர்பெறும்படி இருந்த அகஸ்தியர் ஈசனுக்கு நிகராக வீற்றிருந்தாராம், — 'வடக்கே கைலயங்கிரியில் ஸாக்ஷாத் பரமேசுவரன், தெற்கே பொதிய மலையில் தமிழ் முனிவர்' என்று சொல்லும்படி.

காடு அடர்ந்து யாத்திரிகர் கடக்க முடியாதபடி யிருந்த விந்தியமலைப் பிரதேசத்தைக் கடந்து வந்ததைக் குறித்தும் பௌராணிகர்களின் மனோபாவம் ஒரு கதை கற்பித்திருக்கிறது. எல்லா மலைகளைக் காட்டிலும் தான் உயர்ந்து நிற்க வேண்டுமென்று விந்தியமலை போட்டி போட்டு அந்தப் போட்டியில் இமயத்தையும் வென்று வானளாவி நின்று, யோகிகள் முனிவர்கள் முதலியவர்களுக்கெல்லாம் வழி மறுத்தது. அகஸ்தியர் சிவபெருமானின் கட்டளைப்படி தெற்கே வரும்போது குறுக்கிட்டு நின்ற

இம்மலையை அடக்க விரும்பினார். முனிவரைக் கண்டதும்—தமிழ் முனிவரல்லவா? — விந்தியம் வணங்கி நின்றது. அகஸ்தியர் மிதித்து ஏறி, 'இனி நான் திரும்பி வருமளவும் இப்படியே குறுகிக் கிடப்பாய்!' என்று அப்பால் வந்து விட்டார்.

இக்கதையையும் கவிஞன் மகாத்மாவான அகஸ்தியரின் மகத்தான பெருமைக்கு ஒரு சாட்சியாக்குகிறான் :

யோகம்உறு பேருயிர்கள்
தாம்உலைவு றாமல்,
'ஏகும்நெறி யாது?' என
மிதித்(து)அடியின் ஏறி,
மேகநெடு மாலைதவழ்
விந்தமெனும் விண்தோய்
நாகமது நாகமுற
நாகமென நின்றான்!

[யோகம்உறு பேர்உயிர்கள் — யோக நெறியில் பொருந்திய பெரியோர். உலைவு உறாமல்-துன்பம் அடையாதபடி. ஏகும்நெறி— போகும் வழி. மேகநெடு மாலை



தவழ் — நீண்ட மாலைகள் போல் மேக வரிசைகள் தவழ்கின்ற. விந்தம் — விந்தியம். விண் தோய் — விண்ணை அளாவி வளர்ந்து நின்ற. நாகம் அது — மலையானது. நாகம் உற — பாதாளத்தை அடைந்ததோ என்று சொல்லுமாறு குறுகும்படி. நாகம் என — யானை போலக் கம்பீரமான தோற்றத்துடன்.]

ஆராய்ச்சி — யோகம்

முதன் முதல் விந்திய மலையைத் தாண்டி வந்தவர்களின் பெருமுயற்சியைத்தான் புராணமும் கவிதையும் இப்படி வர்ணிக்கின்றன. இவ்வளவு பெருமையுடன் வந்த முனிவர் தமிழுக்கே தம் வாழ்க்கையை உரிமையாக்கித் தமிழாராய்ச்சியையே தமது யோகமாகக் கொண்டார்.

உழக்குமறை நாவினும்
  உயர்ந்(து),உலகம் ஓதும்
வழக்கினும், மதிக்கவியி-
  னும்,மரபின் நாடி,
நிழற்பொலி கணிச்சிமணி
  நெற்றிஉமிழ் செங்கண்-
தழற்புரை சுடர்க்கடவுள்
  தந்ததமிழ் தந்தான்.

[உழக்கும் — வருந்திப் பழகுகிற. மறை—வேதம். உலகம் ஓதும் வழக்கினும் — உலக வழக்கைக் கொண்டும். மதிக்கவியினும் — உள்ளொளி என்ற ஞானத்தால் பிறக்கும் செய்யுள்வழக்கைக் கொண்டும். மரபின் — முறைப்பட. நாடி — ஆராய்ந்து. நிழல் பொலி — ஒளி விளங்கும். கணிச்சி — மழுவாயுதம். மணி நெற்றி உமிழ் செங்கண் — அழகிய நெற்றியில் நெருப்பு உமிழும் சிவந்த கண்கள். தழல் புரை சுடர்க்கடவுள் — நெருப்பைப் போல் சுடரும் தேஜோரூபியான சிவபெருமான்.]

அகஸ்தியருக்கு முன்பே தமிழ் மொழி அநாதியாக இருந்ததாம். அதனால்தான் சிவபெருமான் தந்த தமிழை அகஸ்திய முனிவர் ஆராய்ந்து வளர்த்துத் தந்தார், — அதாவது, இதற்கு ஒரு புது மலர்ச்சி தந்தார் என்று கூறுகிறான் கவிஞன். தமிழுக்கும் தமிழ்க் கலைகளுக்கும் அகஸ்தியர் புத்துயிர் தந்தார்; வடநாட்டுப் பண்பாட்டையும் இந்நாட்டுப் பண்பாட்டையும் இசைத்து ஒரு புதிய நாகரிகத்தை உருவாக்கித் தந்தார் என்பது கம்பன் குறிப்பு.

வட இந்தியாவும் தென் இந்தியாவும் சந்தித்துக் கலந்து உறவாடி இந்த நாகரிகத்தை வளர்க்க முயன்ற ஒரு பண்டைப் பழங்காலத்தை ஞாபகப் படுத்துவதுதான் அகஸ்தியர் கதை என்று கருதலாம்,

• • • •

ராமன் வருகிறான் என்று கேள்விப்பட்டதும், அகஸ்தியர் சீடர்களுடன் எதிரே வருகிறார்.